ராஜாஜி முத்துக் குவியல்

சின்ன அண்ணாமலை தொகுத்தது

தமிழ்ப் பண்ணை லிமிடெட்
தியாகராய நகரம்......... சென்னை

முதற் பதிப்பு
1950 மார்ச் மாதத்தில்
ஸ்ரீ சின்ன அண்ணாமலையால்
பிரசுரிக்கப்பட்டது.

விலை ரூ. 1—8—0

தமிழ்ப் பண்ணை அச்சகம்
தியாகராயநகரம், சென்னை

முன்னுரை

சின்ன அண்ணாமலை

"ராஜாஜி உவமைகள்" முதற்புத்தகம் வெளிவந்து சில நாட்களுக்குள் விற்பனையாகி விட்டது. உவமைகள் வரிசையில் இது இரண்டாவது புத்தகம். பெயர் குழப்பமில்லாமலிருப்பதற்காக இதற்கு "ராஜாஜி முத்துக்குவியல்" என்று பெயர் சூட்டியிருக்கிறேன்.

சென்ற ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்மொழியில் எத்தனையோ நூல்கள் வெளிவந்துவிட்டன. அதில் பல நூல்கள் மூன்றாம் பதிப்பு, நான்காம் பதிப்பு, ஒன்பதாம் பதிப்புக்கூட அச்சாகியிருக்கிறது. பிரதிகள் ஆயிரம், பதினாயிரம் என்றும் விற்பனையாகி யிருக்கிறது. இவ்வளவு நூல்களிலே இன்னும் நூறு இருநூறு வருஷத்துக்குப் பிறகு வரும் தமிழர் சந்ததிகள் படிக்கக்கூடிய நூல்கள் எவை எவை என்று கேட்டால் முதன் முதலில் ராஜாஜி எழுதிய நூல்களைத்தான் சொல்லலாம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

உபதேசங்களில் எத்தனையோ வகைகள் உண்டு. படித்தவுடன் எறிய வேண்டியவை; படித்துச்சிந்திக்க வேண்டியவை; தொடாமலிருக்கும் வரை க்ஷேமம் என்ற இனத்தில் சேர்ந்தவை—இப்படிப் பலவகை உபதேசம் உண்டு.

ஸ்ரீ ராமகிருஷ்ணர், காந்தி மகான், திருவள்ளுவர், ஏசுநாதர் போன்றவர்களின் உபதேசங்கள்போல் பாராயணம் செய்ய வேண்டியவைகளும் உண்டு.

இந்தப் பெரியோர்களின் உபதேச வகையைச் சேர்ந்தது ராஜாஜியின் உபதேசங்களும்.

ராஜாஜி செய்யும் உபதேசங்களில் வரும் உவமைகள் நம் காலத்தை ஒட்டிய விஷயங்களுடன் கலந்து வந்தாலும், அவைகளைக் கொண்டு விளக்கப்படும் உண்மைத் தத்துவம் எக்காலத்துக்கும் பொதுவானது; சாசுவதமானது; அழி வில்லாதது.

உண்மைத் தத்துவங்களை ராஜாஜி உபதேசம் செய்யும் போது, "இதெல்லாம் பெரிய விஷயங்கள்; நமக்கு எங்கே விளங்கப்போகிறது" என்று நாம் மலைத்து விடாமலிருப்பதற் காக, சின்னஞ் சிறு பிள்ளைகள்கூடச் சுவையுடன் கேட்க— படிக்க ஆசை கொள்ளும்படி உவமைகளின் மூலம் சொல்லிவிடு கிறார். அதனால் அந்தப் பெரிய தத்துவங்களுக்கே எளிமை யான உருவமும், தெளிவும் உண்டாயிவிடுகின்றன. எளிமை என்றால், இதைவிட எளிமையாகச் சொல்லவே முடியாது என்றும் சொல்லலாம். உபதேசங்கள் எவ்வளவுக் கெவ்வளவு எளிமையோ, அவ்வளவுக் கவ்வளவு விஷயங்கள் மிக மிக உயர் வானவை. ஆகவே, அந்த சுவாரஸ்யத்தில் தங்கு தடை யில்லாமல் நாம் அவரது உபதேசங்களை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கேட்டுக் கொண்டோ படித்துக் கொண்டோ யிருந்து விடுகிறோம்.

உதாரணமாக பரம் பொருளைக் காண வேண்டுமானால் அதற்கு வழி என்ன என்பதை ராஜாஜி எப்படிச் சொல்லு கிறார் பாருங்கள் :—

"தயிருக்குள் வெண்ணெய் உண்டு என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் தயிரைக் கடைந்தால்தான் வெண்ணெய் வருமேயொழிய, "தயிரில் வெண்ணெய் இருக்கிறது" "தயிரில் வெண்ணெய் இருக்கிறது" என்று எவ்வளவு

கத்தினாலும் வெண்ணெய் வராது. பரம்பொருளைக் காண வேண்டுமானால் பக்தியுடன் உள்ளத்தில் விருப்பத்தைக் கடைய வேண்டும். 'பரமாத்மா' என்றும் 'ஜீவாத்மா' என்றும் தத்துவம் பேசிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது, தாயைக் காணாத குழந்தை தாயைக்காண விரும்பி வருந்துவதைப்போல் ஆண்டவனை அடைய உள்ளத்தில் வருந்தி உருக வேண்டும்''

தினமும் நாம் பார்க்கிற தயிரை வைத்துக்கொண்டு எவ்வளவு பெரிய விஷயத்தை எவ்வளவு எளிய முறையில் தெரிந்துகொண்டு விட்டோம் பார்த்தீர்களா? வியப்பாகத் தான் இருக்கிறது. ஆனால் நன்றாக அனுபவிக்கிறோம். ஆனந்திக்கிறோம். இவ்விதமே தான் இந்த உபதேசங்களை நமது பிற்கால சந்ததிகள் எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகும் படித்தும் அதிசயித்தும் ஆனந்த மடைவார்கள்.

ராஜாஜி சொல்லும் உவமைகளில் அவருடைய குணங்கள் பிரதிபலிக்கின்றன. எளிமையும், உயரிய சிந்தனையுமே ராஜாஜியின் வாழ்க்கை முறை, ஆகையால்தான் அவரை எல்லோரும் மகான் என்று கொண்டாடுகிறோம்.

அந்த மகான் வாழும் காலத்தில் நாம் வாழ்கிறோம்; அவருடைய உபதேசங்களைக் கேட்கும் படியான பாக்கியத்தை நமது செவிகள் அடைந்திருக்கின்றன; அவருடைய திரு மேனியைத் தரிசிக்கும் படியான புண்யத்தை நமது கண்கள் பெற்றிருக்கின்றன; அவர் பாதத்தைத் தொட்டு வணங்கும் அதிர்ஷ்டத்தை நமது கரங்கள் செய்திருக்கின்றன.

ஆகவே நாம் அனைவரும் பாக்யசாலிகள்தான், அதிலும் நான் ரொம்ப ரொம்ப பாக்யசாலி. தமிழ் நூல் வரிசையில் தெய்வத் திருக்குறளுக்கு அடுத்த படியாக வைத்துப் போற்றப் படவேண்டிய ராஜாஜி நூல்களை வெளியிடும் பாக்யம் எனக்குக் கிடைத்திருக்கிறதல்லவா? ஆகவே மிக்க மகிழ்ச்சியுடன் இந்த முத்துக்குவியலைத் தமிழ் மக்களின் முன்னிலையில் வைக்கிறேன்.

—சின்ன அண்ணாமலை

ராஜாஜி முத்துக்குவியல்

(உவமைகள் இரண்டாம் பாகம்)

ஒரு பையனுக்குக் கல்யாணம் நடக்கிறது. தன்னை எல்லாரும் கல்யாண மாப்பிள்ளை என்று சொல்லுவதுதான் அவனுக்கு அப்போது தெரிகிறது. பின்னால் அவன் மனைவி வீட்டுக்கு வந்து அவனுக்குச் சமைத்துப் போடத் தொடங்குகிறாள். 'நம் தினசரி வாழ்க்கையில் உதவி புரிய ஒருத்தி வந்திருக்கிறாள்' என்று முதல் முதலாக அப்போதுதான் அவனுக்குப் புரிகிறது. அவன் ஆனந்தம் அடைகிறான்.

மணப் பந்தலிலே முகம் தெரியாமல் அலங்கரித்துக் கொண்டு கொட்டு மேளமும், மந்திரமும் முழங்கத் தன் பக்கத்திலே உட்கார்ந்திருந்த பெண்ணைக் கண்டபோது, 'மனைவி' என்றால் என்ன பொருள் என்று அவன் அறிய

வில்லை. இப்போது சமையல் அறையில் அவள் வந்து உட்கார்ந்ததும், அவன் அதை அறிகிறான். பின்னால் உபத்திரவம் தொடங்குகிறது. 'மனைவி'யின் பொருள் இன்னும் நன்றாக அவனுக்குப் புரிகிறது.

இது போலவே, 'சுதந்திரம்' 'சுதந்திரம்' என்று வெகு காலமாக நாம் பேசிக்கொண்டிருந்தோம். நம்மவரில் ஒருவரே கவர்னர் ஜெனரலாக வந்ததும், ஆச்சரியப்படுகிறோம். வேறே யார் வருவார்? பழைய நண்பர்களெல்லாம் பரபரப்புடன் வந்து வந்து பார்க்கிறார்கள். 'ஓஹோ! அந்தப் பழைய ஆள்தான்!' என்று கண்டு ஏமாந்து போகிறார்கள்!...உபத்திரவமும் ஆரம்பிக்கிறது. 'இவர் என்ன கவர்னர் ஜெனரல்? நான் ஏன் அந்தப் பதவியை வகிக்கக்கூடாது?' என்றெல்லாம் நினைக்கிறார்கள். சுதந்திரம் எல்லாருக்குமே சொந்தம், என்றாலும், அதிகாரத்தைச் சிலரே செலுத்த முடியும். அது நீங்கள் கொடுத்த அதிகாரந்தான். அதைச் சிலர் செலுத்த மற்றவர்கள் அடங்கி நடக்க வேண்டியதுதான். ஒரு பந்தலைப் போடும்போது கண்ட பலர் 'ஆஹா! என்ன அலங்காரமாகயிருக்கிறது இது!' என்று வியப்பார்கள். ஆனால் அதற்குள் சிலரே புக முடிகிறபோது மற்றவர்கள் வெளியே நிற்கவேண்டியிருக்கிறது. 'என்னடா பந்தல் இது!' என்று பலர் சலிப்படைகிறார்கள். எல்லோரும் அதிகாரத்தை அடைய முடியாது. சிலர் அடுத்த தேர்தல் வரையில் காத்திருக்கிறார்கள். சிலர் ஏதாவது தப்பு நடக்கிறதா என்று காத்திருக்கிறார்கள். உடனே அந்தத் தப்பிலே விசேஷ உரிமை கொண்டாடி, பன்னிப் பன்னி அதைப் பற்றிப் பேசி, மாறுதல் விளைத்துச் சகலரும் சந்தோஷமடையச் செய்யப் போவதாகக் கோஷிக்கிறார்கள். இதெல்லாம் சுதந்திரத்தின் உபத்திரவங்கள்.

2

நம்முடைய மகத்தான ஆலயங்களை நீங்கள் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். ஆலயத்தில் ஒரு விக்ரகத்தை வணங்குகிறோம். ஆலயத்தில் உள்ள விக்ரகம் ஒரு வேலையும் செய்யாது; ஆலயச் சிப்பந்திகள்தாம் வேலைகள் செய்ய வேண்டும். ஆலயத்திலிருந்து விக்ரகத்தை அகற்றி விட்டால் ஆலயத்தில் உள்ள ஒரு சிப்பந்தியும் வேலை செய்யமாட்டார். விக்ரகத்துக்கு உயிர் இல்லை என்றாலும், ஆலயத்தில் அது அவசியமாக இருக்கிறது. இதேபோலத்தான் அரசாங்கம் என்ற கோயிலில், நிர்வாக காரியங்களைக் கவர்னர் புரிவதில்லை. என்றாலும்' அவர் அவசியமாக இருக்கிறார். விக்ரகத்தின் பயனும், அவசியமும் அதனிடம் நீங்கள் காட்டும் பக்தியையே பொறுத்திருக்கின்றன. கவர்னரிடம் நீங்கள் அனைவரும் மரியாதையும், பக்தியும் காட்டுவீர்களானால், உங்களுக்கு ஏதோ சிறிது பணிபுரிய அவருக்குச் சக்தி ஏற்படும். கவர்னரை நீங்கள் அலட்சியம் செய்வீர்களானால், அவர் வர வர சக்தியற்று போவார். கவர்னர் இல்லாத சர்க்கார், சாமி இல்லாத கோயில் போல ஆகிவிடும்.

3

ஸ்ரீராம ஜெயந்தியையும், கிருஷ்ண ஜெயந்தியையும் நாம் கொண்டாடுகிறோம். அவர்கள் மறைவுக்காக நாம் அப்போது வருந்துகிறோமா? அவர்களுடைய கல்யாண குணங்களைப் பற்றித்தானே சிந்திக்கிறோம்? அதேபோலத்தான் காந்தி ஜெயந்தியையும் நாம் கொண்டாட வேண்டும்.

4

காந்திஜியின் முகத்தை அல்ல, அவருடைய உபதேசங்களை நினைவு கூர்வதுதான் இப்போது அவசியம். ராமன், கிருஷ்ணன், வியாசர், நாரதர் இந்த மகா புருஷர்களின் உண்மையான சொரூபத்தை, ஓர் எழுத்தாளனோ, கவிஞனோ நமக்கு உணர்த்தி விடுகிறான். ஆனால் ஸினிமாவோ, இந்த மகா புருஷர்களாகப் பாசாங்கு செய்யும் நடிகர்களின் உண்மைச் சொரூபத்தையே நமக்கு ஞாபக மூட்டுகிறது. மிகவும் நிர்ப்பந்தமாக இருந்தாலொழிய, காந்திஜியின் படத்தைத் திறந்து வைக்க எனக்கு மனமேயில்லை. புயலடித்து விழுந்த கோயிலைப் போய்ப் பார்ப்பதுபோல் இருக்கிறது இந்தக் காரியம்; இது என் துக்கத்தைத்தான் அதிகரிக்கிறது.

5

பழக்கூடைக்காரி தூரத்தில் வரும்போது, குழந்தைகள் ஒரே முகமாய்த் தாயாரிடம் "பழம் வாங்கித்தா!" என்று கத்துகின்றன. ஆனால் அவள் வந்து கூடையைக் கீழே இறக்கியதும், குழந்தைகள் 'எனக்குத்தான் பெரிது' 'எனக்குத்தான் சின்னது' 'எனக்கு இரண்டு வேணும்' 'எனக்கு மூன்று வேணும்' என்று சண்டையிடுகின்றன. இப்போது சுயராஜ்யப் பழக் கூடையைக் கீழே இறக்கியாகிவிட்டது. அதனால் தான் சண்டை. காங்கிரஸ் தாயார் எல்லாருக்கும் சரியாய்ப் பிரித்துக்கொடுத்த பின்னர் சண்டையும் தீர்ந்துவிடும்.

6

ஸம்ஸ்கிருதமே தமிழிலிருந்துதான் வந்ததென்று கூடச் சிலர் சொல்லுகிறார்கள்! இது எப்படியிருக்கிறதென்றால், போளியைப் பிசைந்து உருட்டித்தான் வெல்லம் செய்திருக்கிறார்கள் என்று சொல்வது போலிருக்கிறது.

7

'தாய் மொழி, தமிழ் மொழி' என்று நீங்கள் தொல்லைப் படவேண்டாம். தாய்மொழி, தானே வளரும். அதில் நாம் தலையிடாமல் இருப்பதே நல்லது. தாய் மொழி ஜீவ பாஷை. நாமா அதற்கு உயிர் கொடுக்க வேண்டும்? வளரும் பயிரிலே நம் கையை வைத்தால், பயிருக்கே கேடுதான் விளையும். பெண்ணை அழகு செய்ய அவள் காதிலும், மூக்கிலும் துளை போடுகிறோமே அதுமாதிரிதான்.

8

எதைச் செய்தாலும் அதிலிருந்து இன்பத்தை அடைவது எப்படி என்பதை நாம் கற்க வேண்டும். உணவைச் சமைக்கும் தாயார் அதைச் சாப்பிடும் தன் குழந்தைகளை விட சமையல் செய்வதில் அதிக சந்தோஷம் பெறுகிறாளல்லவா?

9

யாருக்காவது வியாதி வந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். டாக்டர் கொடுத்த மருந்துச் சீட்டை அந்த நோயாளி மனப்பாடம் செய்துகொண்டே இருந்தால் வியாதி தீர்ந்து விடாது. அந்த மருந்துச் சீட்டைப் போலப் பல பிரதிகளை அச்சடித்து அவற்றை விநியோகம் செய்தாலும் நோய் குணமாகிவிடாது. அல்லது அந்த மருந்தை வாங்கிக்கொண்டு வந்து வீட்டில் வைத்து, அதைக் காலையிலும் மாலையிலும் பயபக்தியுடன் பூஜை செய்தாலும் நோய் தீர்ந்துவிடாது. நோயாளிக்கு உடம்பு குணமாக வேண்டுமானால், அவர் மருந்தைச் சாப்பிடவேண்டும். காந்திஜியின் உபதேசங்களை அச்சடித்துமட்டும் பயன் இல்லை. காரியத்தில் கடைப் பிடிக்க வேண்டும்.

10

"முதலில் ஆலயப்பிரவேசத்தை ஏன் மலையாளத்தில் ஆரம்பிக்கப்படுகிறது?" என்று சில எதிர்கட்சி பிரமுகர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சின்னக் கதை சொல்ல விரும்புகிறேன்.

"தைமூர் என்னும் பெயர் பெற்ற பாரசீகமன்னன் அவனுடைய வாழ்க்கையின் ஆரம்பத்தில் ஒரு முறை சண்டையில் தோல்வியடைந்து ஓர் கிழவியின் குடிசையில் போய் ஒளிந்து கொண்டான். அந்தக்கிழவி அவனுக்கு ஒரு தட்டில் கூழ் வைத்தாள். தைமூர் அதன் நடுவில் கையை இட்டான். "ஐயோ சுட்டு விட்டதே!" என்று அலறிக்

கொண்டு கையை எடுத்தான். "அப்பனே! இப்படி அவசரப் பட்டு நடுவில் கொண்டு போய் கையை வைக்கலாமா? ஓரத்தி லிருந்து எடுத்துச் சாப்பிடு" என்றாள் கிழவி. தைமூர் இதில் அடங்கிய உண்மையை உணர்ந்து அரசியல் வாழ்க்கையிலும் அதைக் கைக்கொண்டு பெரிய வெற்றி வீரனானான். அதைப் போல நாமும் ஆலயப் பிரவேசத்தை ஒரு ஓரத்தில் ஆரம்பித் திருக்கிறோம். சீக்கிரத்தில் மத்திக்கு வந்து விடுவோம்.

11

"நீங்கள் தான் அரசியலிலிருந்து விலகிக் கொண்டதாகச் சொன்னீர்களே? மறுபடி ஏன் வந்தீர்கள்?" என்று ஒரு நண்பர் கேள்வி எழுதி அனுப்பியிருக்கிறார் "இந்த நண்பர் சொல்வதுபோல் நான் அரசியலுக்கு திரும்பி வந்து விட வில்லை......" "அப்படியே நான் திரும்பி வந்தால் காங்கிரஸ் வாதிகள்" ஏன் வந்தாய்? என்று கேட்கமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் 'ஏன் போனாய்?' என்றுதான் கேட்கிறார்கள். "ஏன் வந்தாய்?" என்று கேட்பவர்கள் காங்கிரசுக்கு எதிரிகள் தான். நான் வந்தால் தான் இவர்களுக்கு எல்லாம் ரொம்பக் கஷ்டமாக இருப்பதுபோல் காணப்படு கிறது. இதை நினைக்கும் போது எனக்கு முழுவதும் திரும்பி வந்து விடலாமென்றே தோன்றுகிறது" "இவர்கள் கேட்பது எப்படி இருக்கிறதென்றால் "ஓர் நோயாளி படுத்த படுக்கையாக இருந்தான். அவன் எழுந்திருக்கக் கூடாது. எழுந்திருந் தால் வியாதி குணமாவது தடைப்படும், என்று டாக்டர் சொல்லி இருந்தார். இது தெரிந்த ஒரு திருடன் அந்த வீட்டில் புகுந்தான். அவனைப் பார்த்ததும் நோயாளி

வியாதியை மறந்து, பக்கத்திலிருந்த தடியை எடுத்துக் கொண்டு கிளம்பினன். அதைப் பார்த்த திருடன், "ஓ! இதென்ன அநியாயம் படுக்கையை விட்டு எழுந்திருக்கக் கூடாது என்று டாக்டர் உனக்குச் சொல்லியிருக்க வில்லையா? டாக்டர் கட்டளையை மீறி நீ எப்படி எழுந்திருக்கலாம்? என்று கேட்டானும்......"

12

தபால் இலாகா, வீதி விளக்கு, நகர சுகாதாரம், வீட்டு வேலைக்கு மின்சார சப்ளை ஆகிய இவையெல்லாம் கூட்டுறவு கொண்ட தேசிய ஏற்பாடுகளேயாகும். பொது உடைமை சாத்திய மென்பதற்கு இவை பிரத்தியட்ச உதாரணங்களாய் விளங்குகின்றன. தனக்கு வயிற்றுவலி யில்லா திருந்த போதும், வயிற்றுவலி மருந்தை ஒரு மனிதன் தன் சொந்தப் பெட்டியில் பத்திரமாய் பூட்டி வைத்த காலமுமிருந்து வந்தது என்பது வாஸ்தவந்தான். ஆனல், இன்ரே வயிற்று வலி மருந்து ஆஸ்பத்திரியில் இருக்கிறதே. வலியுள்ளவன் அதை உபயோகித்துக் கொள்ளலாம்; வலி இல்லாதவன் அதை உபயோகித்துக் கொள்ள உரிமை கிடையாது.

13

ஒரு இலையில் அநேக கறிகாய் பதார்த்தங்களுடன் ஹிந்துஸ்தானி என்ற துவையலையும் பரிமாறியிருக்கிரேம். சாப்பிட்ட சாதம் ஜீரணமடையத் துவயலை உபயோகிப்பது நலமென்று கருதியே அவ்வாறு செய்திருக்கிரேம். துவையல்

பிடித்தமில்லாவிட்டால், துவையலைத் தள்ளிவிட்டு மற்றவைகளை உபயோகித்துக் கொள்ளட்டும், பிறகு சாதம் ஜீரணிக்காமல் துவையலின் அவசியத்தை உணர்ந்தால் அப்பொழுது துவையலைச் சேர்த்துச் சாப்பிடட்டும். துவையலின் ருசியுஞ் உபயோகமும் சிலருக்குத் தெரியாத காரணத்தினலே துவையலை இலையில் பரிமாறக் கூடாதென்பது விதண்டா வாதமாகும்.

14

ஆறெல்லாம் கரை புரண்டு தண்ணீர் வெள்ளமாய் ஓடுகையில், கொஞ்சம் ஜலத்தை எடுத்து வந்து வீட்டுக்குள் பூட்டி வைத்துக் கொள்ளுவீர்களோ? மாட்டீர்களல்லவா? இதேமாதிரி, எல்லாச் சொத்தும் சாதாரணத் தண்ணீரைப் போலவே எல்லோருக்கும் சொந்தமான பொது உடைமையாகி விடும்போது, யாரும் திருடமாட்டார்கள்; பொதுச் சொத்தைத் எடுத்துக்கொண்டு தனியாகச் சொந்தத்துக்குச் சேர்த்து வைக்கவும் மாட்டார்கள். ஏராளமான தண்ணீர் இருக்கும்போது, அதை யராவது திருடிச் சேர்த்து வைப்பதுண்டோ?

15

நகரசபை, ஜில்லாபோர்டு முதலிய ஸ்தாபனங்களில் காங்கிரஸ் வாதிகள் தங்களுக்குள்ளே வேற்றுமைகளை வளர்த்துக் கொள்வதும், தேர்தலின்போது சில இடங்களில் நடந்த சம்பவங்களும் என் மனதை பெரிதும் புண்படுத்துகிறது.

ஒவ்வொரு சமயம் இதை எல்லாம் எண்ணும் போது, சென்ற இருபது வருஷமாக என்னுடைய வாழ்க்கையே வியர்த்தமாய்ப் போயிற்றே என்று தோன்றுகிறது. இந்த அரசியல் சேற்றில் ஏன் இறங்கினேம் என்றே எண்ணம் உண்டாகிறது. ஆனால் 'ஆடி மாதத்தில் சேற்றில் இறங்கி உழுது நடவு நட்டுக் களை பிடுங்கினால்தான், தைமாதத்தில் தானியம் அறுவடை செய்யலாம். ஒருவரும் சேற்றில் இறங்காமலேயே இருந்து விட்டால் தானியம் எப்படி விளையும்? என்று என்னை நானே சமாதானம் செய்து கொள்ளுகிறேன்.

16

நமது சமூக ஆசாரங்களிலும், பழக்க வழக்கங்களிலும் எவ்வளவோ தீமையான அம்சங்கள் இப்போது இருக்கின்றன, அவைகளை மாற்ற வேண்டியதுதான். ஆனால் அதற்காக அந்த ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்திய நமது முன்னோர்களையும் நாம் திட்ட வேண்டியதில்லை; அந்தக் காலத்தில் அவைகளுக்கு ஏதோ உபயோகமிருந்திருக்கலாம்; நமக்குத் தெரியாதபடியால் அவர்களை மூடர்கள் என்று சொல்லக் கூடாது......மரங்களுக்கு மேலே பட்டை இருக்கிறது, மரங்கள் ஜீவித் திருப்பதற்கும் வளர்வதற்கும் அந்தப் பட்டை மிகவும் அவசியம். ஆனால், மரம் முதிர்ச்சியடைந்து வெட்டிய பின்னர், கட்டிட வேலைகளுக்கு உபயோகப் படுத்தும் போது தச்சன் முதலில் பட்டையைத் தான் செதுக்கி எறிகிறான். அப்போது அப்பட்டைக்கு எவ்வித உபயோகமுமில்லை. ஆனால், மரத்துக்குப் பட்டையே வேண்டியதில்லை என்று சொல்லி விடலாமா? பட்டை யில்லா

மலே மரத்தை வளர்த்திருக்க வேண்டும் என்று அந்தத் தச்சன் மரம் வளர்த்தவனைத் திட்டினால் அவனை மூடன் என்று சொல்ல மாட்டோமா?

17

நாடகம், சங்கீதம், சினிமா முதலிய சகல களியாட்டங்களையும் எல்லாரும் அனுபவிக்கக் கூடியவையாக, பொது உடமை ரீதியில் நடத்தலாம். திருப்பதி மலை இருக்கிறது, அது எந்தத் தனி மனிதருக்காவது சொந்தமாயிருக்கிறதா? அங்கே போகும் சகல யாத்ரிகரும்தான் அதன் காட்சி யானந்தத்தை அனுபவிக்கிறார்கள். தாஜ்மஹால் காட்சியையும் எல்லாரும் அனுபவிக்கலாம்; எவரும் தன்னுடைய சொத்து என்று அதில் பாத்தியம் கொண்டாடவில்லை. இதே மாதிரியே, சகலமான சௌந்தர்யக் காட்சிகளையும் எல்லாரும் ஐக்கியமாக அனுபவித்து இன்புறும் வண்ணம் பொதுவில் நிர்வகிக்க முடியும்; அது சாத்தியமேயாகும்.

18

புதிய முயற்சியில், பல தவறுகளும், பிசகுகளும் ஏற்பட்டு கடைசியில் நமது இலட்சியம் கைகூடும். வழி நமக்கு முக்கியமல்ல; பலன்தான் முக்கியம். ஓர் உதாரணம் சொல்லுகிறேன். ஒரு வியாதியைச் சொஸ்தம் செய்து கொள்வதற்கு மருந்தை வாயால் சாப்பிட்டு, வயிற்றுக்குள் செலுத்தலாம்; அல்லது ஊசி மூலம் குத்தித் தேகத்தில் செலுத்திவிடலாம். இந்த இரண்டையும் விட்டு, தேகத்தில் வியாதி உண்டான பாகத்தை

வெட்டி யெறிந்து ரண சிகிச்சையும் செய்து கொள்ளலாம். இவையெல்லாம், ஒரே பலனை அடைவதற்கான பல வழிகள். இந்தப் பரீட்சைகளெல்லாம் சில சமயம் உயிருக்கே ஆபத்து உண்டாகக்கூடும்; அல்லது நோயைக் கடுமையாக்கி விடவுங் கூடும். என்றாலும், நாம் பரீட்சைகளைச் செய்துகொண்டேதான் போகவேண்டும்; ஒவ்வொரு தோல்வியைக் கொண்டும், புதிய படிப்பினை பெறவேண்டும்.

19

வட நாட்டில் ஹிந்திக்கும், உருதுக்கும் நடந்து வரும் சச்சரவு காரணமாகத் தென்னிந்தியாவில் எங்கள் நிலைமை சங்கடத்துக்குள்ளாயிருக்கிறது. ஒரு பெண்; அப்பா, அம்மாவுக்கு ரொம்ப செல்லப் பெண். அவளுக்கு தடபுடலாகக் கல்யாணம் நடந்தது. புக்ககத்துக்கு வந்தபின்தான் தனக்கு இரண்டு மாமியார்கள் என்பது தெரியவந்தது. அப்புறம்தான் அவளுக்குத் தன் கஷ்டங்களும் தெரிந்தது. பெரிய மாமியாருக்கு சிசுருஷை செய்தால் சின்ன மாமியார் கோபித்துக் கொள்ளுகிறாள். சின்னவள் சொன்னதைக் கேட்டால் பெரியவளுக்கு ஆத்திரம். இருவரையும் சந்தோஷப் படுத்துவது என்பது சிரமமாயிருந்தது. என்ன செய்வது என்று புரியாமல் பெண் அம்மாவுக்குக் கடிதம் எழுதினாள்:—“அம்மா, நான் இங்கே இரண்டு மாமியாரிடமும் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறேன்; எது செய்தாலும் குற்றமாகப் போய்விடுகிறது; எனக்கு இந்த புக்ககத்தில் வாழ்ந்த வாழ்வு போதும் என்று தோன்றுகிறது; இந்தத் தொல்லையிலிருந்து காப்பாற்றேன்.”

கடைசியில் தாயார், பெண்ணைப் பிறந்தகத்துக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டாள்! ஹிந்தி கட்சிக்காரர்களும், உருது கட்சிக்காரர்களும் போட்டுக்கொள்ளும் சண்டைகள் தென்னிந்தியர்களாகிய எங்களை அத்தகைய கஷ்டத்துக்கு உள்ளாக்குகிறது. ஒரு மாமியாராயிருந்தால்தான் முடித்தனம் செய்யலாம்.

20

எண்ணெய்க்கும், காஸ்டிக் சோடா உப்புக்கும் இடையே எவ்வளவோ வேற்றுமை இருக்கிறது. எண்ணெய் வழவழப்பாகவும், அசுத்தமாகவும் இருக்கிறது. காஸ்டிக் சோடா உப்பு உடம்பில் பட்டால் எரியும்; உடம்பு புண்ணாகி விடும். ஆனால் இந்த இரண்டு பொருள்களையும் நாம் ஒன்றாக சேர்க்கும்போது நமக்கு நல்லசோப்பு கிடைக்கிறது. ருஷ்ய காஸ்டிக் சோடா உப்பும் அமெரிக்க எண்ணெயும் என்றாவது ஒருநாள் ஒன்றாகக் கலந்து உலகத்துக்கு ஒரு சோப்பை வழங்குமென்று நாம் நம்புவோமாக.

21

பம்பாயில் ஒரு ஜோரான ஆலை இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அதன் சொந்தக்காரர்கள் அதைத் தேசத்துக்குக் கொடுத்து விடுகிறார்கள் என்றும் வைத்துக்கொள்வோம். அதனால் என்ன? அந்த ஆலையால் கிடைத்த லாபத்தை அதன் அத்தியட்சகர்களும், மானேஜர்களும் பங்கு பிரித்துக் கொண்டது போய், தேசம் முழுவதற்கும் அது வந்து சேரும். அவ்வளவு தானே ஒழிய, தேசத்திலுள்ள சகல பிரஜைகளுக்கும், அந்த ஆலையையே ஒருவருக்கு ஒரு ஆணி, இன்னொருவருக்கு ஒரு கம்பி

இவ்வாறு பிரித்துக் கொடுத்து விடுவார்கள் என்று அர்த்தமல்ல. ஓர் ஆலேயைக் கோர்ட்டார் ஜப்தி செய்துவிட்டால் என்ன நடக்கிறது? கடன் காரர்கள் சார்பாக நிர்வாகம் செய்கிருர்கள். அவ்வளவுதானே யொழிய, ஆலேயில் எவ்வித வித்தியாசமும் ஏற்பட்டுவிடாது.

22

“மனிதனுடைய உழைப்பால் விளேயும் தானியங்களும் உணவுப் பொருள்களும் இருக்கின்றனவே, இவற்றின் தன்மை வேறு விதமானது. இவை போன்றவற்றில் தனி மனிதனுக்குச் சொத்துரிமை அவசியமாக இருக்கிறது” என்று நீங்கள் நிஜனக்கக்கூடும். ஆனல் உண்மையில் அப்படியொன்றும் வித்தியாசம் கிடையாது. தபால் போக்கு வரத்து ஊழியம் ஒரே மொத்தமாக சமூகம் பூருவுக்கும் பொதுவாய் நடைபெறுகிறது. ஒவ்வொரு மனிதனின் கடிதமும் அவனிடம் போய்ச் சேருகிறது. இவ்வேலேயை ஜன சமூகம் முழுவதும் சேர்ந்து செய்யவில்லேயா! இவ்வாறே மனிதர்களின் ஏனேய தேவைகளேயும், எல்லார் நன்மைகளுக்கும் ஒத்த முறையில் கூட்டுறவோடு பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

23

வண்டி இழுத்துப் பழகின மாடுகள், பாரமான வண்டியை இழுப்பதற்கும் தாஞகவே கழுத்தை வலியக் கொடுப்பதைக் காண்கிருேம். அதுபோலத்தான் தேச சேவையில் பழகியவர்களும் கஷ்டமான காரியங்களே வலிய மேற்கொள்ளுகிருர்கள்.

24

பழக்கப்பட்ட மாடுகள் இரவில் தங்கள் வழியே போய்க் கொண்டிருக்கும். எஜமானன் தூங்கினாலும், அவை தன் வழியே சென்று கொண்டிருக்கும். அதுபோல பொதுமக்கள் தலைவர்கள் காட்டிய வழியில் தாங்களாகவே சென்றுகொண்டிருக்க வேண்டும். தலைவர்கள் அடிக்கடி வழிகாட்டிக்கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது.

25

தலைக்கு குல்லா பிடிக்கவில்லை என்பதற்காக தலையை வெட்ட முடியாது. குல்லாவைத்தான் மாற்றிக்கொள்ள வேண்டும். அதுபோல, சட்டத்திலுள்ள குற்றங்களுக்காக ஜனங்களைத் தண்டிக்கக் கூடாது. ஜனங்களின் வாழ்க்கைக்கு ஏற்றபடி அந்தச் சட்டத்தையும், தர்மத்தையும் மாற்றி யமைக்க வேண்டும்.

26

கோவிலுக்கு நியமிக்கப்பட்ட தர்மகர்த்தா கோவில் பணத்தையும், அதிகாரத்தையும் தன்னுடையதென்று நினைப்பது பாவம்; சட்டத்திற்கு விரோதம். கடவுள் தண்டனையும் கிடைக்கும். அதேபோல் சர்க்காரின் பணத்தையும், அதிகாரத்தையும் நிர்வகிக்கும் ஜனப் பிரதிநிதிகள் அவற்றைத் தங்களுக்குச் சொந்தமென நினைப்பது மகாபாவம். ஜனங்களின் தண்டனை பொல்லாதது.

27

தகப்பனர் சொத்தில் நல்ல பிள்ளை, சோம்பேறிப் பிள்ளை எல்லாருமே பங்கு கேட்பதுபோல், காங்கிரஸ் முயன்று பெற்ற அதிகாரத்தில் எல்லாக் கட்சியாரும் பங்கு கேட்கின்றனர். இதை மறுப்பது எப்படி?

28

புதிய மாட்டை வண்டியில் கட்டி விரட்டினுல், அது மிரண்டு பள்ளத்தில் கொண்டு தள்ளிவிடும். அதுபோல் காங்கிரஸ் வண்டியில் போலீசைக் கட்டி தடபுடலாக விரட்டினுல் பள்ளத்தில்தான் விழ நேரிடும். புது மாடுகளைப் பக்குவமாக ஓட்டுவதுபோல், போலீசையும் பக்குவமாக நடத்தவேண்டும்.

29

ஒரு சோல்ஜர் ஒன்று அல்லது இரண்டு சண்டைகளில் அனுபவம் பெற்ருல், வலுவுள்ளவனுக ஆகிவிடுகிருன். அதேபோல் தான், இன்றைக்குத் தொழிலாளிகள் போராட்டங்களில் அனுபவம் பெற்றதினுல் பலசாலிகளாக ஆகியிருக்கிருர்கள்.

30

ஒரு சிறுவன் அன்று பிறந்த கன்றுக் குட்டியைத் தூக்கக் கூடும்: அதுடன் சிறிது காலம் விளையாடக்கூடும். ஆனுல் அக்கன்று பசுவானுல் சிறுவனையே தூக்கி விடுகிறது. இந்தியா ஒரு பசு வென்பதை பிரிட்டன் உணரவேண்டும்.

31

ரைட் ஆனரபில் சாஸ்திரியார் ஆலயப் பிரவேசத்தை எதிர்த்தும், எதிர்க்காமலும் செய்த பிரசங்கத்தைப் பற்றி என்ன கூறுவது!

அது பாரிஸ் லேடியின் குடையைப் போன்றிருக்கிறது. அது குடைதான்; அழகாகவும் இருக்கிறது. ஆனால் அது வெய்யிலிலோ, மழையிலோ உதவுவதில்லை. அதுபோல் சாஸ்திரியாரின் பிரசங்கம் அழகாயிருக்கிறதே தவிர, அது காரியத்துக்குப் பயன்படாது.

32

தேர்தலில் தனிப்பட்ட முறையில் ஸ்ரீ. பி. வரதராஜுலு நாயுடுவும் காங்கிரஸ் சார்பில் ஸ்ரீ. அவிநாசிலிங்கம் செட்டியாரும் போட்டியிடுகின்றனர்.

ஸ்ரீ வரதராஜுலு நாயுடும் காங்கிரஸ்காரர் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இருவரும் கெட்டிக்காரர்கள்; தேசபக்தர்கள். ஆனால் நாயுடுவின் மீது காங்கிரஸ் முத்திரையில்லை. நீங்கள் எத்தனையோபேர் வியாபாரிகள் இங்கிருக்கிறீர்கள். முத்திரைக்குத் தான் அதிக மதிப்பு என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. வெள்ளிக்கோ, செம்புக்கோ ஒரு விதமான மதிப்பும் கிடையாது. முத்திரையில்லாத தேய்ந்த காசை நாட்டுப் புறத்துச் சின்னஞ்சிறு பையன்கூட வாங்கச் சம்மதிக்கமாட்டான். ஸ்ரீ. அவிநாசிலிங்கமும் ஸ்ரீ. நாயுடுவும் வெள்ளியாக இருக்கலாம். ஆனால் முத்திரை அவினாசிலிங்கம் மீதுதான் இருக்கிறது. நாயுடு

அவர்கள் தேய்ந்த நாணயத்தைப் போன்றவர். அதைக் கொண்டு கொடுக்கல் வாங்கல் நடக்காதல்லவா ?

33

நமக்குக் குடிப்பதற்கு ஒரு டம்ளர் தண்ணீர் போதும். ஆனால் கிணற்றிலிருந்து எடுக்கும்பொழுது நாம் அளவாக ஒரு டம்ளர் மட்டும் எடுத்துக்கொள்வதில்லை. ஒரு வாளியைப் போட்டு மொண்டு நாம் கொஞ்சம் அதிகமாகவேதான் எடுக்கிறோம். ஏனென்றால் அது உயர வருவதற்குள் இடிபட்டுக் குறையவோ தளும்பவோ செய்யலாம் அல்லவா ? வரி வருவாய் சம்பந்தமான இந்த பட்ஜெட்டும் அதே மாதிரியானதுதான். தேவைக்கு மேல் ஏன் அதிகம் வரி விதிக்கிறீர்கள் என்பதற்கும் இது தான் பதில்.

34

சர்க்கார் ஒரு எருமை. அது மக்களாகிய குடியானவர்களுக்குப் பால் தருகிறது. அது தனக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளுவதில்லை. தான் தின்னும் தீனியை நமக்குத் திருப்பிப் பாலாகவே தந்துவிடுகிறது. குடியானவன் எருமைக்குத் தீனிபோடாமல் பாலை மட்டும் கறந்து சாப்பிட வேண்டும் என்று நினைத்தால், அவனை முட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். பட்டனி கிடக்கும் எருமை பால் தருமா ? சர்க்காரிடம் நன்மையை எதிர்பார்த்தால் அதற்கும் நல்ல தீனி போட வேண்டும். இல்லாவிட்டால் எவ்வளவு உயர்ந்த நோக்கங்களையும், கொள்கைகளையும் உடையதாக இருந்தால் கூட, சர்க்காரால் மக்களுக்கு நன்மை செய்ய முடியாது.

35

உங்கள் வீட்டுக் கெதிரே நிழல் தரும் மரம் ஒன்று இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் நிழலில் இளைப்பாறலாம்; உட்காரலாம்; நடுப்பகலைக் கழிக்கலாம். சிற்சில சமயம் பறவைகள் மரத்தின் மீது உட்கார்ந்து தரையை அசிங்கம் செய்து விடுவதும் உண்டு. அந்த மரத்துக்குப் பதிலாக நீங்கள் ஒரு வராந்தா அமைத்துக்கொண்டு விட்டால் நல்லது தான். ஆனால் உங்களிடம் யாராவது வந்து, 'கையில் காசு உள்ளபொழுது வராந்தா அமைத்துக் கொள்ளலாம், இப்பொழுது முதல் காரியமாக இந்த மரத்தை வெட்டிவிடு' என்று ஆலோசனை கூறினால் நீங்கள் அவனைக் கெட்டிக்காரன் என்று எண்ணமாட்டீர்கள். கதரின் நிலைமை அதேபோன்றுதான் இருக்கிறது. கதர் ஏழை இந்தியாவுக்கு வாசலில் குளிர்ச்சி தரும் மரத்தைப் போன்றது. நாம் அதை இப்பொழுதே எப்படி வெட்ட முடியும்?

36

குடியானவன் அடுத்த வருஷம் பயிரிடும் பொருட்டு, விதை சேமித்து வைக்கிறான். பயங்கரப் பஞ்சம் தலைவிரித்தாடும் காலத்தில்கூட விதைக்காக வைத்திருக்கும் தானியத்தைச் சாப்பாட்டுக்காக உபயோகப் படுத்திக்கொள்ள விரும்ப மாட்டான். நம் மாணவர்கள் வருங்காலச் சமூகத்துக்கு விதை போன்றவர்கள். சுதந்திரப்போரிலோ, நாட்டில் நடக்கும் கிளர்ச்சிகளிலோ அவர்களை ஈடுபடச் செய்வது தவறான காரியம். இந்தியாவின் வருங்கால மேன்மையை உத்தேசித்து அவர்கள் நன்றாகப் படித்து அறிவை விருத்தி

செய்து கொள்ள வேண்டும். பிற்காலத்தைச் சமாளிக்கத் தயாராக வேண்டும்.

37

சர்க்கார் ஆர்டினென்ஸுகள், போடுவது சாதாரணமாக நல்லதில்லைதான். ஆனால் சட்ட சபை கூடுவதற்கு இன்னும் அதிக நாள் இருக்கிறது. ஆகவே ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்குப் பொறுப்பானவர்களைக் காப்பாற்றுவதற்கு ஆர்டினென்ஸ், போடவேண்டியது அத்தியாவசியமாகிவிட்டது. ஞாயிற்றுக்கிழமை யன்று பாங்கிகளுக்கெல்லாம் விடுமுறை நாள். கெட்டிக்கார மனிதன் என்ன செய்கிறான்? பணம் தேவையாயிருந்தால் அடுத்த வீட்டுக்காரனிடம் கடன் வாங்கிக் காரியத்தைக் கவனித்துக் கொள்ளுகிறான். மறுநாள் திங்கட்கிழமை பாங்கி திறந்ததும் பணத்தை எடுத்து வாங்கினவனுக்குத் திருப்பிக் கொடுத்து விடுகிறான். அதுமாதிரிதான் ஆலயப்பிரவேச சம்பந்தமான இந்த ஆர்டினென்ஸும்.

38

மகாகவி பாரதியார் தம் வாழ்நாளில் பட்ட கஷ்டங்களைப் பற்றிச் சிலர் அடிக்கடி பேசுகிறார்கள். அது தேவையில்லாத பேச்சாகும்.

அடர்த்தியான ஆலமரம், மக்களுக்குக் குளுமையையும், நிழலையும் தருகிறது. ஆனால் தானோ வெய்யிலில் காய்கிறது. இந்த ஆலமரத்தின் சுபாவந்தான் மகான்களின் சுபாவமும்

பிறர் சுகப்படுவதற்காக அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆல மரம் வெய்யிலில் நிற்கிறதே என்று நாம் புலம்புவதினால் என்ன பயன்?

39

உங்களுக்குத் தொண்டாற்றும் மந்திரிகளுக்கு நீங்கள் போதிய சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். நீங்கள் உலையில் அரிசியைப் போட்டுவிட்டு அடிக்கடி விறகை மாற்றிக் கொண்டே யிருந்தால், அரிசி வேகாது. விறகு தீப்பற்றி நன்றாக எரிவதற்கு நீங்கள் அவகாசம் அளிக்க வேண்டும். ஆனால் நீங்கள் பொறுமை இழந்து "இந்த விறகு சுகம் இல்லை; இதை எடுத்தெறியப் போகிறேன்" என்று சொன்னால் நீங்கள் போட்ட அரிசி வேகாது. ஆகையால் நீங்கள் ஒரு சர்க்காரைப் பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்கு முன் அந்த சர்க்காருக்குப் போதிய அவகாசம் அளிக்க வேண்டும்.

40

ஜாதி ஏற்பாடு பிடிக்காத என் நண்பர்களுக்கு நான் ஓர் எச்சரிக்கை செய்கிறேன். பொது உடமை ராஜ்யத்தில், ஜாதி ஏற்பாடு புதிய விதமாய்த் தோன்றிவிடுவதை அவர்கள் காண்பார்கள். ஜாதி ஏற்பாட்டை இப்பொழுது நாம் ரொம்ப ரொம்ப வெறுக்கிறோம். என்றாலும், புதிய தினுசு ஜாதி ஏற்பாடு பொது உடைமை ராஜ்யத்தில் ஸ்தாபிதமாகத்தான் போகிறது. நான் ஓர் உதாரணம் தருகிறேன், பொது உடமை ராஜ்யத்தில் நமக்கு பைஸிக்கிள் வேண்டியிருக்கிறது என்று

வைத்துக் கொள்ளலாம். ஒரு கூட்டத்தார் அவற்றைச் செய்வார்கள். இயற்கையாகவே அதில் அவர்களுக்கு ஒரு விசேஷத் திறமை ஏற்பட்டுவிடும். ஆகையால் நினைத்தவரெல்லாம் பைஸிக்கிள் தொழிற்சாலை திறக்கச்சாத்தியப்படாது. என்னிடம் நிறையச் செல்வம் இருந்து நான் ஒரு தொழிற்சாலையை வாங்க முயன்றாலும் கூட, அரசாங்கம் அதற்கு இடங் கொடுக்காது. துரைத்தனத்தின் அதிகாரப் பத்திரம் பெற்றவரே பைஸிக்கிள் செய்வார்கள். அவர்கள் ஒரு தனிக் கோஷ்டியினராகி, தங்களுக்கென ஒரு தொழிற் சங்கமும் ஸ்தாபித்துக் கொள்ளுவார்கள். இதனால், ஒரு பைஸிக்கிள் ஜாதி ஏற்பட்டுவிடும். ஆனால், பைஸிக்கிள் ஜாதி என்ற பெயர் மட்டுந்தான் இருக்காது. இதேமாதிரியே, தொடர்ச்சியாக, வெவ்வேறு விதமான தொழில்களைச் செய்வோரெல்லாம் அந்தந்த ஜாதியினர்போல் கூட்டுச் சேர்ந்து விடுவார்கள்.

41

ஒரு தேன் கூட்டை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு ஈயும் வேண்டிய ஆகாரத்தை அருந்துகிறது. ஆனால் சம்பளம் ஒன்றும் கிடையாது. எல்லாம் உழைக்கின்றன; எல்லாவற்றுக்கும் சாப்பாடு கிடைக்கிறது. இந்த மாதிரிதான் பொது உடமை ராஜ்யத்திலும் வேலை யெல்லாம் பொது ஊழியமாயிருக்கும்; வேலை செய்வோர் யாவரும் கௌரவிக்கப்படுவார்.

42

பொது உடமை ராஜ்யத்தை உடனே ஸ்தாபித்துவிட முடியாது; சிறுகச் சிறுகத்தான் ஸ்தாபிக்க வேண்டும்.

முதலில், சில தொழில்களைத் தனி மனிதர் சொந்தத்தில் செய்யும்படி விட்டுவைக்க வேண்டியதுதான். மற்றவற்றைப் பொது நிர்வாகத்துக்கு மாற்றி விடவேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக ஒவ்வொரு தொழிலையும் பொதுவுக்கு மாற்றி வந்தால் கடைசியில் சகல தொழிலுமே பொது நிர்வாகத்தின் கீழ் வந்துவிடும். அப்படிச் செய்து விடும்போது என்ன ஆகுமென்று சொல்லுகிறேன். இப்பொழுது பணம் கொடுத்து வாங்கும் பல சாமான்களை, அப்பொழுது ராஜாங்க உத்தியோகஸ்தர்களிடம் கேட்டு, நாம் வாங்கிக் கொள்ளலாம். பம்புக் குழாயில் தண்ணீர், சந்தைகளில் தாகத்துக்கு மோர், தபாலாபீஸ்களில் வேண்டிய நமூனுக்கள் முதலியவை எல்லாருக்கும் இப்போது கிடைக்க வில்லையா? இந்த மாதிரி அப்போது அநேக சாமான்கள் தேவைப்பட்டவர்களுக்குக் கிடைக்கும். இப்பொழுதுங் கூடச் சில கிராமங்களில் நாவிதன் இலவசமாய் வேலை செய்து விடுகிறான்; ஏகாலி அப்படியே பணம் வாங்காமல் துணி வெளுத்துத் தருகிறான். பொது உடமை ராஜாங்கத்தில், இந்த மாதிரியே டாக்டர், தோட்டி, சமையற்காரன், ஆகிய எல்லோருமே இலவசமாய் ஊழியம் செய்வார்கள். சௌகரியப்பட்டால் சமைத்த உணவுகூட இலவசமாய்க் கிடைக்கும்; சவாரியும் இலவசமாய்க் கிடைக்கும். வேலை இருக்கிறவர்களெல்லாம் ரயில் வண்டியில் இலவசமாய்ப் பிரயாணம் செய்யலாம்; அதற்கு ஒன்றும் பணம் கொடுக்க வேண்டியதில்லை. ஒரு குடும்பத்தில் வண்டியிருந்தால், குடும்பத்தைச் சேர்ந்த யார் வேண்டுமானலும் அந்த வண்டியைக்கட்டிச் செல்லவில்லையா? பொது உடமை ராஜ்யத்திலும் இப்படித்தான். வேண்டிய ரயில் வண்டிகள் எல்லாருக்காகவுமே ஓடும்; அப்படி யிருக்க, எதற்காக எவரும் கூலி கொடுக்க வேண்டும்? இந்த மாதிரியே இப்போது பணம்

கொடுத்துப் பெறவேண்டியதாக இருக்கும் இன்னும் அநேக வசதிகள் பொது உடைமை ராஜ்யத்தில் இலவசமாய்க் கிடைக்கும்.

43

தன்னுடைய ஐந்து குழந்தைகளைத் தன் அருகே யழைத்து, "நான் வைத்திருக்கும் சொத்து உங்கள் ஐவருக்கும் போதுமானது" என்று ஒரு தந்தை கூறுகிறான். பிள்ளைகள் சொல்ல வேண்டிய பதில் என்ன? "இல்லை; அது போதாது. எங்களில் சிலர்தான் சந்தோஷமா யிருக்க முடியும்; மற்றவர் துன்பப்பட வேண்டியதுதான். எங்களில் மூத்தவனே அந்தச் சொத்தை அடையவேண்டும்"—இவ்வாறு பிள்ளைகள் சொன்னால், அது நியாயமா யிருக்குமா? ஹிந்துக்களாகிய நம்மிடையில் அவிபக்த குடும்பங்கள் இருக்கின்றன அல்லவா? அந்த மாதிரி உலக முழுவதும் ஒரே அவிபக்த குடும்பமாய் ஒன்றுபட்டு வாழவேண்டுமென்பதுதான் பொது உடைமைத் திட்டம்.

44

மிக நன்றாக வைத்தியம் செய்பவனுக்கு அரசாங்கத்தார் இக் காலத்தில் ஒரு பட்டம் கொடுக்கிறார்கள். ஆனால், ஒரு தோட்டி நன்றாக வேலை செய்தால், அதைப்பற்றி கவனிப்பதே யில்லை. பொது உடமை ராஜ்யத்தில் பட்டங்களையும் விசேஷச் சலுகைகளையும் யாரார் தன் தன் வேலையை நன்றாய்ச் செய்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுப்பார்கள். ஓர் உதாரணம் சொல்லுகிறேன்; ஒரு நல்ல தோட்டி விசேஷ லீவு

எடுத்துக் கொள்ளலாம்; இங்கிருந்து காசிக்குப் போய்வர இஷ்டமானல், இலவசமாய் ரயில் பிரயாணம் முதலிய வசதிகள் பெறுவதற்கு அவனுக்கு உரிமை இருக்கும்; அவனுக்கு நல்ல உணவு கிடைக்கும். ஒவ்வோர் இடத்திலும் உள்ள ஜனங்கள் அவனுக்கு உதவி செய்யுமாறு, ராஜாங்கத்தின் கட்டளை பிறக்கும். ஆகையால், கௌரவங்களைப் பற்றி இப்போது இருந்து வரும் பாகுபாடுகள் சாசுவத மானவை அல்ல; இதை நீங்கள் அறியவேண்டும். இவை என்னவோ தற்செயலாய் ஏற்பட்டுவிட்ட பிரிவினைகளேயாகும்.

45

ஒரு காலத்தில் மாதம் எட்டு ரூபாய்ச் சம்பளத்துக்கு எனக்குச் சமையல்காரன் கிடைத்தான். சில வருஷகாலத்தில் 12, 15, 40, என்று சம்பளம் உயர்ந்து விட்டது. ஒரு சமையல் காரனுக்கு நான் மாதம் 60 ரூபாய்கூட சம்பளம்கொடுத்திருக்கிறேன். நீங்கள் ஏழையென்று வைத்துக்கொள்ளுங்கள்; உங்களுக்கோ சமைக்கத் தெரியாது; சமையலை ஜீவனத் தொழிலாய் செய்துகொண்டிருக்கும் ஒருவரிடமே போய் நிற்க வேண்டியதாயிருக்கிறது. அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒரு சமையல்காரனைவிட, ஒரு தோட்டி இன்னும் அதிகச் சம்பளம் கேட்கக் கூடிய காலம் சீக்கிரமாக வந்து கொண்டிருக்கிறது. என்னை கேட்டால் இன்றைய தினமே தோட்டியை, "குறைந்த பட்சம் 40 ரூபாய் மாதச் சம்பளம் கேளு" என்று நான் சொல்லுவேன். "என்னை வேலைக்கு வைத்துக் கொள்ள நீங்கள் கடமைப்பட்டிருக்கவில்லை. ஆனல், என் ஊழியம் தங்களுக்குத் தேவையானல், 40 ரூபாய்

கொடுத்துத் தானுகவேண்டும்'' என்று அவன் சொல்ல வேண்டும். தோட்டி தன் வேலையைச் செய்த பிறகு, குளித்து முழுகி நல்ல துணி உடுக்கச் சக்தியுடையவனுயிருக்கவேண்டும்; வண்டி சவாரி செய்யவும், நல்ல உணவு உண்ணவும் சக்தி யுடையவனுக வேண்டும். நாகரீகமடைந்த அநேக நாடுகளில் இப்பொழுது கூடத் தோட்டிகள் அப்படித்தானிருக்கிருர்கள்.

46

பொது உடமை வாழ்க்கைக்கு முதல்படி தோட்டிவேலை தான். ஏனென்ருல், அதுதான் மனித வாழ்க்கையிலேயே மிக அவசியமான தொழில். சாப்பாட்டில் சுத்தம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு இந்தக்காரியத்திலும் சுத்தம் முக்கிய மாகும், முதன் முதலாக இதை நீங்கள் கவனிக்காவிட்டால், ஒரு ராஜாங்கத்தை உங்களால் நடத்த முடியாது. இந்தியாவில் சுயராஜ்ய அரசு நடக்கும் பொழுது, ஒவ்வொருவரும் சம உரிமைகள் பெற்று சமத்வப் பிரஜையாகவே தம்மை மதிப்பார். அப்படிப்பட்ட காலத்தில் தோட்டிகள் அனுப்பும்படி சேனுவுக்கா நீங்கள் விண்ணப்பம் செய்யப் போகிறீர்கள்? அது நடக்காதல்லவா.

47

கண்டிப்பான சட்ட திட்டங்களுக்குட்பட்ட நிர்ப்பந்தத் துக்காகக் கற்பு வாழ்க்கையை நடத்தும் மனிதர்கள் ஒருவித மாய் மனோராஜ்யம் செய்து கொண்டிருக்கிருர்கள். வரன் முறையற்ற ஸ்திரீ புருஷ உறவுடன் வாழ்வதில் மிகுந்த

இன்பங்களிருப்பதாக, அவர்களின் நினைப்பு. ஜெயிலுள்ளவர்கள், தித்திப்பான தின்பண்டங்கள் வெகு ருசியா யிருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா. இதேபோலத்தான் அவர்களின் எண்ணமும். ஆனால், தித்திப்பான மிட்டாய் வகைகளைத் தொடர்ந்து சில காலம் வரையில் உங்கள் ஆகாரமாக வடித்துக் கொண்டிருந்தால், பழைய சாம்பாறும் குழம்பும் எப்பொழுது கிடைக்கும் என்று ஆசைப்படுவீர்களல்லவா? இம் மாதிரிதான் வேசைகளும் தவறான வாழ்க்கை நடத்தும் பெண்களும், விவாகம் செய்துகொண்டு, ஸ்திரமான கற்பு வாழ்க்கையை வாழவிரும்புகிறார்கள்.

48

பொது உடைமை ராஜ்யத்தில், குழந்தைகளின் தாய் தந்தைகளும், தேச ஊழியர் என்ற முறையில்தான் நடந்து கொள்ளுவார்கள்; குழந்தைகளைச் சரியானமுறையில் பாதுகாத்து வளர்ப்பார்கள். ஆகையால், இல்லற வாழ்க்கை பொது உடமை ராஜ்யத்திலும் இருந்தே வரும். ஒரு தகப்பனார் தம் குழந்தையைச் சரியான முறையில் போஷித்து வளர்க்காவிட்டால், பொது உடைமை ராஜாங்கம் அந்தக் குழந்தையைப் பராமரிப்பதற்கு வேண்டிய சரியான ஏற்பாடுகளைச் செய்வதுடன், தந்தையின் அசிரத்தைக்காக அவருக்குத் தண்டனையும் விதிக்கும். இன்று தினம் நான் என் குழந்தையை நன்றாக வளர்க்கத் தெரியாமல் பூசைகொடுத்தேனானால், அதில் சர்க்கார் தலையிட முடியாது. என்னைக் கோர்ட்டுக்கு இழுப்பார்களானால், 'இவன் என் மகன், இவன் ஒரு 'மைனர்'ப் பையன், என் இஷ்டப்படி யெல்லாம் இவனை நான் நடத்துவேன், நான்

இவனை உதைப்பேன் யார் என்னைக் கேட்பது? என்று நான் சொல்ல முடியும். பொது உடைமை ராஜ்யத்திலோ இந்தச் சங்கதி பலிக்காது. ஏனென்றால், பொது உடைமை ராஜாங்கத்தில், தேசத்தால் நியமிக்கப்பட்ட ஒரு காரியனைப் போலவே என் குழந்தையிடம் நான் நடந்து கொள்ள வேண்டும். குழந்தையை என்னிஷ்டப்படியெல்லாம் நடத்தும் உரிமை எனக்கு இருக்காது.

49

ஒரு வீட்டில் தாயை எவ்வளவு கௌரவமாய் மதிக்கிறார்கள்! இப்படித் தாயைப்போல் தேசத்திலேயே தோட்டியை மதிக்கப்போகிற ஒரு காலம் வரத்தான் போகிறது. அப்பொழுது கஷ்டங்கள் அசௌகரியங்கள் இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு செய்யவேண்டிய வேலைக்கும், மிகுந்த கவனத்தோடு செய்யவேண்டிய வேலைக்கும் அதிக கௌரவம் கொடுக்கப்படும். சில வேலைகள், இயற்கையிலேயே கஷ்டமாயும் மனசுக்குப் பிரியமில்லாமலும் இருக்கின்றன. தோட்டி வேலையும் இப்படிப்பட்ட ஒன்று. இந்த வேலைகளைச் செய்ய, ஜனங்கள் முன் வராமல் இருக்கலாம். குடும்பங்களில் கூடத் தான் மனசுக்குப் பிடிக்காத சில காரியங்கள் இருக்கின்றன. அவற்றை வீட்டிலேயே ரொம்பவும் தன்னலத் தியாகம் செய்பவரும் மிகவும் கௌரவிக்கப்படுவருமான பெரியவர்கள்தான் மேலே போட்டுக்கொண்டு செய்கிறார்கள். இப்பொழுதும் கூட, சில ஆசிரமங்களில், தன்னலத் தியாகிகளான மனிதர்கள் தானே இப்பேர்பட்ட காரியங்களைச் செய்துவருகிறார்கள்? அவர்கள் மிகவும் கௌரவிக்கப் படுகிறார்கள். இவ்வாறே

பொது உடமை ராஜ்யத்திலும் நோயாளிக்குப் பணிவிடை செய்யவும் அழுக்குத் துணிகளைச் சுத்தம் செய்யவும் தியாகிகள் முன் வருவார்கள். மற்றத் தொழில்களைச் செய்வோருக்குக் கிடைக்கும் கௌரவத்தைவிட பத்து மடங்கு கௌரவம் அவர்களிடமே செலுத்தப்படும்.

50

இன்று தினம் தனி மனிதர்களுக்குச் சொத்தும் சுதந்திரம் இருக்கிறது. இதனால் தான் தகுதியற்ற மனிதர்களெல்லாம் கலியாணம் செய்து கொண்டுவிடுகிறார்கள். நான் காக்கை வலிப்புக்காரனாக இருக்கலாம்.; குஷ்ட நோயாளியாக இருக்கலாம். ஆனால், என்னிடம் நிறையப் பணம் இருந்தால் போதும்; துர்ப்பாக்கியவதியான ஒரு பெண்ணைப் பலி கொண்டு விடலாம். தனி மனிதனுக்குச் சொத்து என்ற சங்கதியே இல்லா விட்டால் ஒரு பெருவியாதிக்காரனை எந்தப் பெண் விவாகம் செய்து கொள்ளுவாள்? ஆகையால், பொது உடைமை ராஜ்யத்தில், விவாகம் சம்மந்தமான சட்டதிட்டங்களே அவசியமில்லாமலிருக்காலம். என்றாலும், அதிலும் தவறுகள் நிகழ்ந்துவிடாதபடி பார்த்துக் கொள்ளுவதற்காகச் சில விதிகள் செய்து வைத்துக்கொள்ளப்படும்.

51

பொது உடமை ராஜாங்கத்திலும் விவாகம் செய்து கொள்ளும் உரிமை ஜனங்களுக்கு இருந்துவரும். ஆனால், எல்லாருக்கும் அந்த உரிமை இருக்காது. இல்வாழ்க்கை

நடத்தத் தகுதியில்லாத மனிதன் மணம் செய்துகொள்ள அனுமதி கிடைக்காது. ஓர் எஞ்சினை எப்படி ஓட்டுவதென்று தெரியாத மனிதனுக்கு யாரவது எஞ்சின் டிரைவர் வேலை கொடுப்பார்களோ? மாட்டார்களல்லவா. குடும்பங்களைப்போல் எஞ்சின்கள் ஏராளமாயில்லை. எஞ்சின்கள் குறைவாயிருப்பதால், நல்ல எஞ்சினீர்கள் சிலபேரைப் பொறுக்கிக்கொள்ள முடிகிறது. ஆனால், குடும்பங்கள் ஏராளமாயிருக்கின்றன. ஆகையால், இரண்டாந்தரம், மூன்றுந்தரமான ஜனங்களும் மணம் செய்து கொள்ள இடம் கொடுக்க வேண்டித்தான் இருக்கும். என்றாலும், சொஸ்தமே செய்ய முடியாத வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கும் மனிதர்களுக்கு விவாக உரிமை அளிக்கப்படமாட்டாது.

52

பொது உடைமை ராஜ்யத்தில் அழகுக்கலை என்ன வாகும் என்பது ஒரு கேள்வி. சர்க்கார் நிச்சயம் அவற்றை ஆதரிப்பார்கள். என் வீட்டில் ஒரு அழகான சித்திரம் வைக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுவதாக வைத்துக்கொள்ளலாம். அந்தச் சித்திரத்தை நான் சில நாள் வரையில் என் மனையில் வைத்திருக்கலாம். பல பேர் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுமாறு அது ரொம்ப அழகா யிருந்துவிடுமானல், அந்தப் படத்தைச் சித்திரக் காட்சிச் சாலையில் கொண்டுபோய் வைத்துவிட வேண்டியதுதான். அதை இஷ்டமானபோது எனது மேஜைக்குள் பூட்டி வைத்து, விருப்பமான போது வெளியே எடுப்பதென்ற காரியம் நடவாது; என் மனதுக்குத் தோன்றியபடி விலைவைத்து அதை விற்பனை செய்யவும் முடியாது.

53

சமையல் தொழில் இழிவானது என்று ஒரு காலத்தில் கருதப்பட்டு வந்தது. இன்றைய தினமோ, ஹோட்டல் சொந்தக் காரர்கள் மிகவும் கௌரவம் வாய்ந்த மனிதர்களாக மதிக்கப் படுகிறார்கள். சில சமையல்காரர் தொழில் செய்யும்போது அணிந்திருந்த துணியைக் களைந்துவிட்டு, தோகை மயிலைப் போல் நேர்த்தியான உடை உடுத்து, அலங்காரமாய் வெளியே புறப்படுவதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். அடுத்த பத்து வருஷங்களுக்குள் அநேக விஷயங்கள் உண்மையிலேயே மாறத் தான் போகின்றன; அதற்கு நீங்கள் உங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

54

சொத்தை யெல்லாம் சமதர்ம ரீதியில் சரியான முறையில் பங்கீடு செய்வதுதான் இறுதியான பரிகாரமாகும். கூட்டுறவு இயக்கம் (கோவாபரேடிவ் ஸிஸ்டம்) என்பது மனிதர் களுக்கு இடையே வேற்றுமை என்ற வியாதிக்கு இடங் கொடுத்துவிட்டு பிறகு அந்த வியாதிக்கு எதிரிடையான மருந்துகள் கொடுத்துச் சொஸ்தப்படுத்த முயலுவதற்கே சம மாகும். நாம் வேண்டும் பரிகாரம் அதைவிட அடிப்படையான தாகும்; வியாதியின் மூலகாரணத்தையே கல்வி யெறிந்துவிட வேண்டுமென்கிறோம்.

55

செடியின் ஆதி மூலம் விதை. செடியே விதைக்குள் இருக் கிறது என்றாலும் குற்றமில்லை. பறவையின் சிசுவானது முட்

டையில் இருப்பதைப்போல் தாவரத்தின் சிசு விதையில் இருக்கிறது. முட்டை பொரித்துக் குஞ்சு வெளிப்படுவதுபோல் மண்ணுக்குள் பதிந்தவிதை பொரித்து முளைவிட்டு வேரும் இலையும் கொண்டு வளர்கிறது. இவ்வாறு வளரும் விதைக்கு பெற்ற தாயும் தகப்பனும் உண்டு. ஒவ்வொரு விதையும் ஒரு தனித் தாயும், ஒரு தனித் தகப்பனும் மணம் புரிந்து பெற்ற சிசுவாகும்.

56

ஒரு தேன் கூண்டில் பல தேனீக்கள் தம் வேலைக் கிரமத்தை ஒழுங்காகப் பிரித்துக் கொண்டு ஒரு சமூகமாக வாழ்கின்றன. ஒரு செடியின் இலைகளைத் தேன் கூண்டிலுள்ள நூற்றுக்கணக்கான உழைப்புத் தேனீக்களாகப் பாவிக்கலாம். அந்த தேனீக்களுக்கு வாழ்க்கை முழுமையும் உழைப்பதே வேலையாகும். அவை ஆணுமல்ல, பெண்ணுமல்ல. கூண்டிலுள்ள தேனீச் சமூகத்திற்கு உணவு சேமித்து வைப்பதே அவற்றின் வேலையும் சந்தோஷமும் ஆகும். அவ்வாறே செடியின் இலைகளும் செடிக்கு வேண்டியதைச் சேமிப்பதான ஒரு தொழிலையே செய்து வருகின்றன. தேனீக்கள் பறந்து சென்று தேனைத் திரட்டவேண்டும், இலைகள் இருந்த இடத்திலேயே காற்றையும் வெயிலையும் சம்பாதித்துக் கொள்ளுகின்றன, இலைகளுக்குள் ஆண் பெண் என்பது இல்லை. செடியாகிய சமூகத்திற்கு இலைகளே உழைப்புத் தேனீக்கள்.

மலர் என்பது இலையின் பேதமே. ஆனால் அந்த உறுப்பு குல விருத்திக்கென்று ஒதுக்கப் பட்டிருக்கிறது. தேன் கூண்டில் உழைப்பு ஈக்களல்லாத ஆண் ஈக்களும், தாய் ஈயும்

உண்டு. அவை உழைக்கமாட்டா. அதைப்போல் தாவரத்தில் மலர்களிலுள்ள ஆண் பூந்தாதுக்களும், தாய்த்தாதுக்களும் தேன் கூண்டில் ஈக்கள் ஈன்று பாதுகாக்கும் முட்டைகளைப் போன்றனவே செடியில் உண்டாகும் விதைகள்.

57

ஒற்றையடிப் பாதையில் நடக்கும் ஜனங்களில் பெரும்பாலோர் பாதையைத் தொடர்ந்தே சென்றாலும் சிலர் ஓரளவு தடம் விலகி நடப்பதனால் பாதை அகலுவதும் பிளவு படுவதும் போல், உயிர்களின் வழிமுறைப் பான்மையும் அவ்வப்போது மாறுபாடு அடைகிறது. இது தாவர உலகம் பிராணி உலகம் ஆகிய இரு கூறுகளிலும் உண்டு.

58

விதையில் ஒரு பகுதியே உண்மையான சிசுப் பகுதி. அதைத் தவிர மீதிப்பகுதி அந்தத் தாவரச் சிசுவுக்கு ஆரம்ப காலத்திற்கு வேண்டிய உணவாக அமைந்திருக்கிறது. குழந்தைக்குத் தாய்ப்பால் தாயின் உடலில் இருப்பதுபோல் தாவரச் சிசுவுக்கு வேண்டிய தாய்ப்பால் விதைக்குள்ளேயே வைக்கப் பட்டிருக்கிறது.

59

சில விதைகளில் தாவரச்சிசுவுக் கென்று மாச்சத்தும் நெய்பொருளும் ஏராளமாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும்.

அவரை, துவரை, கடலை, பாதாமி, முந்திரி, பருத்திக்கொட்டை, எள்ளு முதலிய விதைகள் இந்த முதலாளி வகையைச் சேரும். நெல், கோதுமை, வரகு, முதலிய தானியங்களும் இவ்வகையே. பணக்காரக் குழந்தைகளைப் போல் இந்த இனங்கள் பிறக்கும் போதே பெருஞ் செல்வத்தோடு தோன்றுகின்றன. முதலாளி விதைகளுக்குச் சிறந்த உதாரணம் தேங்காய். தென்னம் பிள்ளைக்கு உதவுவதற்காகத் தேங்காய்க்குள் ஏராளமான உணவுப் பொருள் வைத்துப் பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. அது முளைத்தபின் மண்ணின்றியே பல மாதங்கள் வளரும். ஆனால் நாம் முதலாளி விதைகளையே தேடிச் சிசுஹத்தியும் கொள்ளையும் புரிகின்றோம். கொட்டையும் தானியமும் மனிதனுக்குப் பயன்படும்படியான முக்கியமான பொருள்கள். பூமியில் வேர்விட்டு முளைப்பதற்காக உண்டான இந்த விதைகள் மனிதன் சமைத்து உண்ணவும் அரைத்துப் பிழிந்து எண்ணெய் எடுத்துக் கொள்ளவும் உபயோகப்பட்டு வருகின்றன. தாவரத்தின் நோக்கம் எதுவோ, அது முற்றும் புறக்கணிக்கப் பட்டது! தாவரங்களின் கஷ்டமே கஷ்டம்! ஆனால் பெருமையுடன் பல்கோடி விதைகளை அது உண்டாக்கி வருகிறது. மனிதனும் தன்னுடைய காரியங்களுக்காகப் பயிர் செய்து அந்தக் குலங்களை நன்றாகவே பாதுகாத்து தருகிறான்.

60

மற்ற மரங்கள் பக்கத்தில் இல்லாதிருந்தால் சந்தனமரம் அழிந்துபோகும். சுதந்தர வெளிவேஷம்; மறைவில் அடிமை வாழ்க்கை. சில மக்களைப் போலவே!

61

கணித முழுவதையும் பல நூற்றுண்டுகளுக்கு முன் வேறு பாஷைக் கலப்பின்றி, உலகத்திற்கு அளித்த இந்திய நாடானது ஊரூராய் அலைந்து, மறுபடியும் தாய் வீட்டுக்கு அந்தக் கலை திரும்பி வந்த காலத்தில், 'உனக்கு உடுக்க இங்கே ஆடையில்லை, பிற தேசத்தாருடைய உடுப்புகள் அணிந்துதான் நீ இங்கே இருக்கலாம்' என்கிறது! என்ன வெட்கக்கேடு! இதுவே வேறுபல சாஸ்திரங்களின் நிலையும். எல்லாக்கலைகளுக்கும் போதிய மொழிச் செல்வம் நம் தாயண்டை உள்ளது. தமிழும், சமஸ்கிருதமும் சேர்ந்து உலகத்தையே அளக்கலாம். நம் நாட்டுக்குப் பழக்கமான உடை உடுத்திஞல்தான் கலைகளைக் கண்டு பயப்படாமலும் திகைக்காமலும் நம் நாட்டு மக்கள் அவைகளண்டை நெருங்கிப் பழகுவார்கள்; பயனும் அடைவார்கள்.

62

ஆங்கிலத்தின் நரம்புக்கட்டும், லாகவமும், பொருட்செறிவும் தமிழில் கிடையாது என்று தமிழை மறந்த தமிழர் எண்ணுகிருர்கள். இவர்கள் புதிய சொற்களும் சொற்றொடர்களும் ஆக்கிஞல் அல்லாது தமிழில் எதையும் இக்காலத்தில் சொல்லமுடியாது என்பார்கள். பழைய சொற்களையும் புராதனக் கலைகளையும் மறந்து விட்டதே இவ்வாருன எண்ணங்களுக்குக் காரணம். வீட்டிலுள்ள பழைய பெரிய பெட்டியில் கிடக்கும் பட்டாடைகளை மறந்து, கந்தல் துணியுடன் கடைக்குப் போய்க் கடனுக்குச் சேலை வாங்குவதைப் போன்றது இந்த மொழிப்பிச்சைக் கொள்கை.

63

இலக்கியமும் சித்திரமும், உள்ளதை உள்ளது போல் வரைந்து விடுவதல்ல. உண்மையைப் படம் பிடித்து வரைவது அவ்வளவு எளிதான வேலையன்று, சாமர்த்தியம் வேண்டும். நான்கு கோடுகள் இழுத்து ஒரு பெருங்காட்டை உயர்ந்த சித்திரக்காரன் காட்டிவிடுவான். மற்றவர்கள் காகிதம் நிறைய மரங்களை எழுதினாலுங் கூடக் காட்டின் அடர்த்தியைக் காட்ட முடியாது. பேச்சை எழுத்தில் அமைப்பதும் அவ்வாறே ஒரு சாமர்த்தியமான வேலை.

64

தனக்கே தெரியாது தன்னுடலின் அழகு; பிறருக்குத் தான் தெரியும். அதிக சிரமப்பட்டு நிலைக்கண்ணாடி வைத்துப் பார்த்துக் கொண்டாலும் தன் அழகைச் சரியாகத் தெரிந்து கொள்வது துர்லபம்.

இவ்வாறே தமிழ் மொழியின் அழகு தமிழருக்குத் தெரிவதில்லை. தமிழ்ப் பேசுவதிலும், படிப்பதிலும் எழுதுவதிலும் தன்னை யறியாமல் தமிழனுக்கு உண்டாகும் உள்ளுவப்பேதான் தமிழின் அழகுக்குப் பிரமாணம். அந்த அழகை வெளித் தோற்றமாகத் தமிழருக்கு எடுத்துக்காட்டுவது கஷ்டம்.

65

சிற்பம் எவ்வளவு அழகு வாய்ந்ததா யிருந்தாலும் உடல், எவ்வளவு ஆரோக்கியம் கொண்டதா யிருந்தாலும், சரிவரக்

கவனித்துப் போற்ருமல் விட்டு விட்டால் கெட்டுப்போகும் பெரிய மாளிகையாஞலும், சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொள்ளாமற்போனல் குடியிருக்க இடமும் வசதியும் போதாமல் போகும். பாஷையும் இவ்வாறேதான். போற்றப் படாமற்போனல், நாளாவட்டத்தில் எந்தப் பாஷையும் அழகு குன்றி, சொல்வளம் குன்றி, லாகவமும் குன்றியதாகத் தோன்றும்; உண்மையில் குன்றியும் போகும்.

66

யந்திரத்திற்குக் கரி போடுவதுபோல் மனித யாக்கைக்கு உணவு போடவேண்டும். கரி எரிந்து உண்டான உஷ்ணத்தைக் கொண்டு யந்திரம் வேலை செய்வதுபோல் மனித யாக்கையில் உணவு எரிந்து உண்டாகும் சக்தியின் பயனாக உடலின் வேலை நடைபெறுகிறது.

ஆயினும் யந்திரம் வேலை மட்டும் செய்யும்; வளராது. மனித யாக்கை வளர வேண்டும். உடலில் மராமத்தும் நடக்க வேண்டும், இதற்கும் உணவு பயன்படுகிறது. யந்திரத்திற்குப் போடும் கரி அல்லது எண்ணெய் அந்த யந்திரத்தை வளரச் செய்யாது; வேண்டிய மராமத்துக்களும் செய்யாது. மனிதனும் மற்றப் பிராணிகளும், யந்திரங்களைப் போலன்றி, உட்கொள்ளும் உணவினின்று இருவிதப் பயன் எடுக்கவேண்டும்.

67

காதலின் பூரண விளக்கத்தைத் தேனீக்களின் வாழ்க்கையில் காணலாம். தேனீக்களின் வாழ்க்கையில் பல அற்

புதங்கள்; அவைகளில் பேராச்சரியத்தைத் தருவது, அவற்றின் காதல்முறைதான். தனி உயிர் என்ன பயனுக்கென்பதும், காதல் என்ற பிரகிருதிமகிழ்ச்சி என்ன பயனுக்கென்பதும், இந்தச் சிறு பிராணிகள் அறிந்திருப்பதாகவே தோன்றுகிறது. பருவமடைந்தவுடன் பெண் ஈ கூண்டை விட்டு வெளியே பறக்கும். பின்னே ஆண் ஈக்கள் தொடர்ந்து செல்லும். பறந்து பறந்து சென்ற ஒன்றின் காதலைக் குமரி ஒப்புக் கொள்ளும். இந்தக் காதலுக்கு ஆண் ஈ கொடுக்கும் விலை என்னவென்று எண்ணுகிறீர்கள்? தன் உயிரையே காதலிக்குத் தத்தம் செய்து விடுகிறது! ஆணும் பெண்ணும் கலந்து மகிழ்ந்ததும் மணவாளனுடைய உயிரையே பெண் ஈ கவர்ந்து தன் வயிற்றுக்குள் அடக்கிக்கொண்டு போய்விடுகிறது. பெண் ஈ கூண்டுக்குத் திரும்பிப் போய்த் தன் ஆயுள் முழுதும் முட்டைகள் இடும். ஆயுளுக்கு ஒரே ஒரு தடவைதான் தேனீக்குக் காதலும் சேர்க்கையும்! அந்த ஒரு சேர்க்கையின் பயனாக ஆண் ஈ இறந்து போகிறது. பெண் ஈக்கு மறுபடி எந்த ஆணுடனும் சேர்க்கை கிடையாது. ஆயிரக் கணக்கான முட்டைகளிட்டுத் தன் குலத்தின் நலனுக்கு வேண்டியவாறு இஷ்டம் போல், ஆண்களையோ, பெண்களையோ அல்லது இரண்டுமில்லாத சுத்த கன்னித் தொண்டர் கூட்டத்தையோ உண்டாக்கிக் கொள்ளும்.

68

விவாகம் செய்துகொண்ட தம்பதிகள் ஒருவரை யொருவர் மதிக்கவும், நேசிக்கவும், கூட்டாளிகளாக வாழ்க்கை நடத்தவும் பயிலவேண்டும். காதலில்லை, தாய் தகப்பனர் செய்வித்த மணம், இது உப்பில்லாத சோறு, பிற நாடுகளில் எவ்வளவு

காதல், கதைகளில் படிக்கிறோம், சினிமாவில் பார்க்கிறோம், அதுவல்லவோ உண்மையான வாழ்வு என்று ஏக்கமடைந்து ஏமாற வேண்டாம். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நம்முடைய நாட்டிலும் ஆண் பெண்கள் கூடி உயர்வும் நயமும் பொருந்திய வாழ்வு நடத்தலாம். மின்னலைக் காண்கிறோம்; அது உண்மையான வேகம், அழகான காட்சி. ஆயினும், மின்னல் மின்னினுல்தான் மழை என்ற நியதி கிடையாது மின்னல் தானுக உண்டாகும்; உண்டானுல் அழகுதான். ஆனுல் மின்னல் இருப்பினும் இல்லையாயினும் மேகங்கள் கூடி மழை பெய்கின்றன அல்லவா, அப்படிப் பெய்வதால்தான் வாழ்வு.

• 69 •

வாலிபர்களே! வழக்கம் சமூக வாழ்க்கை என்பனவெல்லாம் பொய்யல்ல; இலேசாகத் தள்ளி விடக்கூடிய விஷயங்களல்ல. தலைமுறை தலைமுறையாகத் தோன்றிய மனோபாவங்கள், பேசிவந்த மொழிகள், வழங்கிவந்த வழக்கங்கள், செய்துவந்த காரியங்கள், இவற்றின் திரண்ட உருவந்தான் நாம். காதல் வேகத்தினுல் இதை நாம் மறந்துவிடக்கூடாது. மறந்தோமானுல் அபாயம். பம்பரம் சுழலும் வரையில் நின்று கொண்டிருக்கும்; சுழல்வது நின்றதும், பழையபடி தலைகீழாக விழுந்து தரையில் உருளும். ஆகையால், குலத்தையும் மதத்தையும் பாஷையையும் பழக்க வழக்கங்களையும் விட்டு வெகுதூரம் ஓடி அலையாதீர்கள். அதனுல் துயரங்கள் விளையும்; உண்மைச் சுகம் கிடையாமற் போய்விடும்.

70

காதல் என்பதும் மற்றப் பிரகிருதி சக்திகளைப்போல் ஆண்டவனுடைய சொரூபமேயாகும். அதை எந்தக் கோயிலிலும் ஆராதித்துத் தரிசிக்கலாம். ஆனால் பக்தி வேண்டும்; சிரத்தை வேண்டும். பக்தி இருந்தால் எந்தக் கோயிலிலும் ஈசுவரன் இருக்கிறான். உன் மனைவி உனக்கென்று கட்டப் பட்ட காதல் தெய்வத்தின் கோயிலாவாள். நோன்பிருந்து வந்தித்தாயானால், காதல் என்னும் பராசக்தியின் அவ தாரத்தை அக்கோயிலில், தரிசிப்பாய். இல்லையானால், கல்லைத்தான் காண்பாய். அது கல்லின் குற்றமல்ல; உன் குற்றமே.

71

காதல் என்பது ஒரு ஜுரமாகவும், விவாகம் என்பது அதற்கு ஒரு மருந்தாகவும் எண்ணக்கூடாது. அவ்வாறு கொண்டால், விவாகம் முடிந்ததும் ஜுரம் தணிந்துபோகும். மருந்தும் ஜுரமும் கணக்குத் தீர்ந்துபோகும். காதல் என்பது ஒரு ஜுரமன்று. பூவின் மணம்போல் அது ஓர் இயற்கை சக்தி, ஆறாத சக்தி. சில சமயம் அது தானாகப் பொங்கும். இல்லாவிட்டால் மின்சார சக்தியைப்போல் நாம் உண்டாக்கி வளர்த்துக்கொள்ளலாம்.

72

நான் பேச்சு நடைக் கட்சியைச் சேர்ந்தவன். பேச்சைப் பின்பற்றினால்தான் வசன நடையானது அழகும் ரஸமும்

வலிவும் வாடாப் புதுமையும் கொண்டு விளங்கும். அவ்வாறில்லாமல் இலக்கியத்திற் கென்று தனியாக அமைக்கப்பட்ட மொழிகளைத் தொடுத்து எழுதினால், அதில் உயிர் இராது. கூழாங்கற்களை மண்ணெண்ணெய் டப்பாவில் போட்டு ஆட்டின வாறுதான் என்று சொல்லலாம். மக்கள் பேசும் பேச்சு, மாட்டின் கழுத்தில் கட்டிய மணி ஓசைபோல், எவ்வாறு கூடிக் கலந்தாலும் காதுக்கு இனிமையும் மனதுக்கு மகிழ்ச்சியும் தரும். உயிர்கொண்ட மனிதர்களுக்கு ஏற்படும் சுகம் துக்கம் மகிழ்ச்சி கவலை கோபம் பொறுமை இவைகளுக் கிடையில் தாமாகக் கிளம்பும் மொழிகளில்தான் ரஸம், வளைவு, வண்ணம், வடிவம், அழகு, சக்தி எல்லாம் கொண்ட நடைபேதங்கள் கிடக்கும். அந்தப் பேச்சு நடைகளைச் சரியாகப் பிடித்துத் தாங்கள் எழுதும் எழுத்தில் பதியச் செய்வதே எழுத்தாளர்களின் சாமர்த்தியம்.

73

பல வேறு விஷயங்களை அறிந்தும் ஆராய்ந்தும் வரும் தமிழர், தாங்கள் சாதாரணமாகப் பேசும்போது முழுதும் தமிழ் மொழிகளாகவே பேசினால் தமிழுக்கு வளர்ச்சி ஏற்படும். விஷயங்களைப் பேசும்போது தமிழ் மொழி தெரியாத இடத்திலும், மறந்துபோன இடத்திலும், புதுத் துறைகளில் ஆராய்ச்சி செய்யும்போதும், வாதப்பிரதிவாதம் செய்யும் போதும், அறிவையும் நினைவையும் செலவழித்துத் தமிழ் மொழிகளைத் தேடி உபயோகிப்பதற்குப் பதில், எளிதில் கிடைக்கக்கூடிய ஆங்கில மொழிகளை — அதாவது — பிறதேசத்தார் கஷ்டப்பட்டுத் தங்களுக்கென்று உண்டாக்கியிருக்கும்

மொழிகளை, எவ்விதக் கூச்சமுமின்றி இடை இடையேகலந்து பேச்சை நடத்திவிட்டுத் தமிழுக்குச் சோறு போடாமல் கொல்லுகிறோம். சோம்பேறிகளைப் பெற்ற தாயைப்போல் தமிழ் அவதிப்பட்டு வருகிறது. அன்னம் ஊட்டாத தேகம் எப்படி வளரும்? நுட்பமான பொருட் பேதங்களும் அவைகளுக்குத் தகுந்த மொழிகளும் நடையும் ஒரு பாஷையில் எவ்வாறு தோன்றும்? தோன்றியவை எவ்வாறு உயிருடன் நிற்கும்? பொருளைப் புகுத்திப் பேசிப் பழகி வந்தால்தானே பாஷை வளம் பெறும்? கிடைத்த புல்லையும் தவிட்டையும் ஆங்கில மாட்டுக்கே போட்டு வந்தால் நம்முடைய பசு எவ்வாறு பால் கொடுக்கும்? கொஞ்சம் தடை தோன்றிய இடங்களிலெல்லாம் ஆங்கிலத்தைப் போட்டு நிரவிப் பேச்சை ஓட்டிக்கொண்டு போனால், தமிழ் எங்ஙனம் வளரும்? அறிஞர்களெல்லாம் தமிழைக் கொல்லுவதற்காகச் சதி யாலோசனை செய்தால்கூட இதைவிட வேறு யுக்தி கண்டு பிடிக்க முடியாது.

74

யாருடைய பேச்சிலும் ஓரளவு அபிநயம் கலந்துதா னிருக்கும். அது வாய்ப்பேச்சின் சிறப்பு என்றும் சொல்ல லாம். ஆயினும் அளவுக்கு மிஞ்சினால் அமிருதமும் நஞ்சாகும். முக்கியமான மனோபாவ நுட்பங்கள் கைகால் முக வளைவு களில் முடிந்துபோனால் உரம்போடாத வயலைப்போல் மொழி வறண்டு போகும்.

75

கர்நாடக சங்கீதம் என்பது நமது தென்னாட்டினருடையது. கலையானது வளர்ச்சி பெற்று மற்றவர்கள் அதைக் கையாண்டு

வரும் காரணத்தினால் அது அன்னியர் சொத்தாய்ப் போய் விடாது. வெள்ளைக்காரர் மோரை அதிகமாக உபயோகப் படுத்தி அதற்கு வேறு பெயர் கொடுப்பதால், மோர் என்பது நம்முடைய புராதன உணவுப் பொருளாக இருப்பது இல்லை யென்று ஆகிவிடுமா? அல்லது மோர் வடநாட்டிலும் உப யோகப் படுவதால் அது தமிழ்நாட்டிற்கு வடநாட்டிலிருந்து வந்த பொருளாகுமா? பல்லாயிர ஆண்டுகளாகத் தென் ஞட்டில் மகிழ்ச்சி தந்துவரும் இசையும், சங்கீத முறையும் மோரைப்போல், தேனைப்போல், தமிழைப்போல் நம்முடைய பரம்பரைச் சொத்தேயாகும். மற்றவர்கள் அதை எடுத்துக் கொண்டு வழங்குவதால் நமக்கு யாதொரு குறையுமில்லை, நம் முடைய உரிமை அற்றுப்போய்விடாது.

76

கர்நாடக சங்கீத முறையானது தமிழராகிய தியாகய் யரோ அல்லது அக்காலத்திய வேறு பெரியாரோ உண்டாக்கி விட்டதல்ல. இந்த நாட்டிற்கு அது வெளிநாட்டிலிருந்து வந்ததல்ல. பாரதநாட்டில் முக்கியமாகத் தென்ஞட்டில் பல்லாயிர ஆண்டுகளாக வளர்ந்த கலை. அரிசியும் பாலும் சமையலும் சாப்பாட்டு முறையும் உண்டானமாதிரி இசையும் உண்டாகியது.

77

பழைய சங்கீத உருப்படிகளே உயர்ந்தவை. தற்காலத்தில் செய்யப்படுவன எல்லாம் திருட்டுச் சாமான்கள், அல்லது

பல குற்றங் குறைகள் கொண்டவை என்று சிலர் அபிப்பிராயப் பட்டு வாதிக்கிருர்கள். திருட்டு என்பது விதண்டாவாதம். அப்படிப் பார்த்தால் வித்துவான்கள் பாடுவது எல்லாம் திருட்டேயாகும். நாம் பேசுவது, எண்ணுவது எல்லாம் திருட்டே. கலை வளர்ச்சி என்பது செடி அபிவிருத்தியைப் போல். ஒவ்வொரு சமயமும் புதுச் செடி வகை உண்டாக்க முடியாது. ஒன்றைப்போல் மற்ருென்று உண்டாகும். ஆனல் வேறுபாடுகளும் தோன்றும்.

புது உருப்படிகள் எப்போதுமே இரண்டாம் பக்ஷமாகவே இருக்கும் என்பதும் உண்மையல்ல. ஒரு காலத்தில் தியாகய்யர் செய்ததும் புதியதாகத்தான் தோன்றியதல்லவா? கடவுளின் அருளானது முடிந்து தீர்ந்துபோன திரவியமல்ல!

புதுச் சிருஷ்டிகள் காணுத ஒரு தேசத்தில் கலை உணர்ச்சியே நாளடைவில் செத்துப்போகும்.

78

கடலில் மீன்கள் உப்பு நீரில் வாழ்வதுபோல் நம்முடைய தேகத்தின் பல்கோடிக் கண்ணறைகள் இரத்தமாகிய உப்பு நீரில் வாழ்கின்றன. அந்த உப்பு நீர் இல்லாவிடின் அவை உயிரிழக்கும்; அதாவது நாம் இறப்போம்.

79

தேகத்தில் சதா காலமும் இடைவிடாமல் உஷ்ணம் உண்டாக்கப்பட்டு வருகிறது. அசையாமல் கிடந்தாலுங்கூட வெப்பம் உண்டாகிறது. வேலை செய்யும்பொழுது வெப்ப

உற்பத்தி அதிகமாகிறது. கிலக்கரி எரிந்து வேலை செய்யும் இயந்திரத்தைப் போலவே உடலும் ஓர் இயந்திரம். இயந்திரத்தில் சூடு உண்டாவதுபோல் உடலில் வெப்பம் கிளம்புகிறது. இதை அகற்றித் தணித்துக் கொள்ளாமற் போனால் நாம் இறந்து போவோம். ஒரு 'தெர்மாஸ்' புட்டியில் வெந்நீர் அல்லது காப்பியை மூடி வைப்பதுபோல், ஒரு மனிதனை வெப்பம் அகலாமல் முடிவைத்து விட்டோமானால், உடலில் உற்பத்தியாகும் உஷ்ணத்தினாலேயே மூன்று நான்கு மணி நேரத்தில் உயிர் போய் விடும்.

80

ஒரு பானைக்குள் உளுந்து போட்டு மூடுவதுபோல் ஒரு சூரியனுக்குள் லட்சக்கணக்கான பூமண்டலங்களை அடைக்கலாம். அத்தகைய சூரியனைப்போல் பல சூரியன்களை ஒரு நட்சத்திரத்தில் போட்டு அடைக்கலாம்.

81

நம்முடைய் சிற்றறிவுக்கு அடங்கவில்லை என்று ஜகத்தைப் பொய் அல்லது மாயை என்று சொல்லிவிடலாமா?

எறும்பு தன்னறிவுக்கு எட்டாத யானையைப்பற்றிச் சொல்லக் கேட்டு யானையே பொய் என்று சொல்லுவது போல்தான்.

82

கொஞ்ச காலமாகத்தான் நாம் நம்முடைய சமூகப் பண்பாட்டைப்பற்றிச் சிந்தித்தும் பேசியும் வருகிறோம்.

ஒருவனிடத்திலே ஏதாவது ஒரு பொருள் ஏராளமா யிருக்குமானல், அதைப்பற்றி அவனுக்கு நினேவே இராது. நம்மிடம் இல்லாத பொருளேப் பற்றித்தான் நாம் அதிகமாகப் பேசுவோம். நமக்கு ஏதேனும் நோய் வந்தால்தான். நம் உடலில் ஓடும் இரத்தத்தைப்பற்றி எண்ணுகிருேம். இதயத்தைப்பற்றி எண்ணுகிருேம், வயிற்றைப்பற்றி எண்ணுகிருேம். வயிற்றிலே கெடுதல் செய்யும் பண்டத்தைத் தின்ற பிறகுதான், வயிறு இருப்பது தெரியவருகிறது. பண்பாட்டின் விஷயம் இப்படித்தான். பண்பாடென்பது இந்திய மக்களிடையே தொன்றுதொட்டு வந்த ஒரு செல்வம். இப்படி ஒரு செல்வம் நமக்கிருப்பதையே நாம் உணரவில்லே. அயலார் வந்து சொன்ன பிறகுதான் இதை நாம் அறிந்தோம்.

83

வதந்திகள் இக்காலத்திலே எப்படிப் பரவுகின்றனவோ அப்படியே, எண்ணங்களும் உலகத்தில் பல்லாண்டுகளாகப் பரவி வந்திருக்கின்றன. இந்தியப் பண்பாடுதான் ஐரோப்பா முழுவதும் சென்று பரவியிருக்கின்றது. நம்மிடமுள்ள அருந்தனத்திலே நமக்கென்று சிறிதும் வைத்துக் கொள்ளாமல் முழுவதையும் பிறருக்குக் கொடுத்து விடுதலும் முடியும் அல்லவா? பசுக்களும், குதிரைகளும் அயல்நாடுகளுக்கு ஓடிவிட்டு, கொட்டிலும் லாயமும்தான் மிஞ்சியிருக்கின்றன என்று சொல்ல வேண்டிய நிலேமையில் நாம் இருக்கிருேம். "ஒரு காலத்தில் இங்கே பசுக்களும், குதிரைகளும் இருந்தனவே" என்று சொல்லிக்கொள்வது போதுமா?

84

மரத்தை ஏதோ ஓர் இடத்தில் நட்டுவிடுகிறோம். அந்த இடத்திலிருந்தே அது செழித்தோங்கப் பார்க்கிறது. மண்ணிலிருந்து கிடைக்கக்கூடியது அவ்வளவையும் எடுத்துக்கொள்கிறது. அதேபோல நாம் தோன்றியுள்ள சமுதாயத்தின் அருந்தனத்தை நன்றாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நம்மைச் சுற்றியுள்ள ஆசாரக் கட்டுப்பாடுகளைக் கண்டு முன்னேற்றத்துக்கு வழியே யில்லை என்று எண்ணி விடுதல் கூடாது.

85

. போலீஸ்காரர்களுக்குப் பயந்து ஒரு வேலை செய்யாமலிருப்பது போதாது. தெருவிலும், வாய்க்கால் ஓரத்திலும், ஜனங்கள் நடமாடும் வேறு பொது இடங்களிலும் மலசலங் கழிப்பது அநாகரிகம். ஊரைக் கெடுக்கிறது; நமக்கும் நல்லதல்ல யார் இருந்தாலும் இல்லாதிருந்தாலும், செய்யாமலிருக்க வேண்டும். வீட்டில் குழந்தைகள் கண்டவிடத்தில் அசுத்தம் செய்தால் சும்மா இருப்போமா? ஊரெல்லாம் ஒரு வீடு, நாம் அதில் குழந்தைகள் அல்லவா? வீடுதான் நம்முடையது, ஊர் யாருடையதோ தெரியாது' என்றிருப்பது அநாகரிகம்.

86

குழந்தைகளுக்கு நன்னடத்தையும் உள்ளப் பண்பாடும் அமையத்தக்கவாறு நாம் ஒழுக வேண்டும். ஒரு பூனையைப்

பாருங்கள். பூனைக்குட்டி பிறந்து ஆறுமாதங்கூட ஆகியிருக்காது; ஆயினும் அதற்குள், தன் வாழ்க்கையைப்பற்றிய தெல்லாம் அது அறிந்துகொண்டு, தன் தாயைப்போலவே நடக்க ஆரம்பிக்கிறது. நாய்க்குட்டியும் அப்படியேதான். மனிதனுக்கு இருபது வயதுவரையில் அவனுடைய தாய் தந்தையர் அவனைக் கவனித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது! வாழ்க்கையில் வேண்டிய பல்வேறு அம்சங்களைப் பெற்றோரும், உறவினரும், பிறரும் வளர்த்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது. வளர்ப்பிலே எதிலாவது குறைபாடு ஏற்படுமானால், அதனுடைய பலன் குடும்பத்தையே பாதிக்கிறது. மற்றொரு தலைமுறைக்கும் அக் குறைபாடு அமைந்துவிடுகிறது.

87

வாழை மரம் ஒன்றைப் பாருங்கள். அதன் வடிவம் வேர் முதல் நுனி வரையில் எவ்வளவு அமைப்பாக அமைந்திருக்கிறது! அகன்ற பச்சை இலைகள், தள தள வென்று உயிரொளியோடு மின்னும் தண்டுமரம். நுனியில் பாதி மூடியும் பாதி திறந்ததுமாக எட்டிப் பார்த்துக்கொண் டிருக்கிற புதிய குருத்து. அடியில் பட்டுப்போல், அழகாய்ப் பழுப்பேறின பட்டை. 'என் வேலை முடிந்தது. வளரும் செடியின் வளர்ச்சிக்குக் காப்பாகக் கீழே கிடக்கிறேன், தடையாக நிற்கமாட்டேன்' என்று வாய்திறந்து பேசுவதுபோல் இருக்கிறது. உயிர் படைத்த ஒரு ஜனசமூகத்தின் பண்பாட்டுக்கு வாழை மரம் எவ்வளவு பொருத்தமான உபமானம்!

88

குப்பையன் வீட்டுப் புழைக்கடையில் அவன் தகப்பனார் வைத்த வாழை மரம் ஒன்று இருக்கிறது. மேலே விட்ட

இலையெல்லாம் அறுபட்டு, மரம் மொட்டையாய்க் கம்பம் போல் நிற்கிறது. கீழே சாக்கடை நீர். அதில் அழுகிக் கிடக்கும் பட்டைகள். செடிக்கு ஜலம் தானாகச் சாக்கடையில் வந்தால் உண்டு. உலர்ந்து கிடந்தாலும் கேட்பார் இல்லை; இந்தப் பரிதாபமான நிலையிலும் குருத்துவிடப் பார்க்கிறது. எவ்வளவு கொடுமைக்கு இடையிலும் வளரப்பார்க்கிறது? வளராமற் போனால் செத்தல்லவோ போக வேண்டும்? இது நம் பண்பாட்டின் தற்போதைய நிலை என்று சொன்னால் குற்ற மில்லை. குப்பையன் வீட்டு வாழை மரத்தில் இன்னும் உயிர் இருக்கிறது. காமதேனு அல்லவா? கொஞ்சம் கவலை செலுத்திக் கவனித்தால், எல்லாம் தரும். இதுவரையில் அதற்குச் செய்த கொடுமையையும் மறந்து குருத்துவிட்டு அழகாக வளரும்!

89

சீலமும், கல்வி, கலையறிவும் நல்லுணர்ச்சியும் அழகுபடக் கலந்து நிற்பது பண்பாடு என்றால், அது எல்லா நாட்டினருக்கும் ஒன்றுதானே எனத் தோன்றலாம். அப்படியல்ல. கண்ணும், மூக்கும், முகமும் மற்ற அங்கங்களும் அந்தமாகப் பொருந்தி நிற்பது அழகு என்றாலும், பிராணி உலகத்திலும் மக்கள் உலகத்திலும் எத்தனை வகைவகையான அழகைப் பார்க்கிறோம்? இவ்வாறே பல நாடுகளின் பலவிதப் பண்பாடு களும். உலகமெல்லாம் ஒன்று என்பது உண்மை. அழகெல் லாம் ஒன்று என்பதும் உண்மை ஆயினும், வேறுபாடுகளே உலகத்தின் பேரழகு.

4

90

ஏழைகளுக்கு உதவுவது நம்முடைய தேச ஆசாரத்தில் இன்றியமையாதது. எந்த நல்ல காரணத்தைக் கொண்டும் இதை விட்டு விட்டால், நம்முடைய பண்பாடு மயில் தன் தோகையை இழந்தவாறுகும்.

91

நீண்ட கதை எழுதுவதற்கு வேண்டிய பொறுமையும் அவகாசமுமில்லாமல் சுருக்கமாக எழுதப்பட்ட கதை சிறு கதை ஆகும் என்று யாராவது எண்ணினுல் அது தவறுகும். சிறு கதை வேறு, பெருங் கதை வேறு. அளவு வித்தியாசம் மட்டும் அல்ல; வகையே வேறு. ஆல மரம், புளிய மரம் முதலிய மரங்கள் ஒரு ஜாதி. கிளைகளின்றி ஒரே தண்டாக வளரும் தென்னை, பனை, கமுகு முதலிய மரங்கள் வேறு ஜாதி. அதைப்போல் சிறு கதை வேறு, நெடுங் கதை வேறு.

92

சிறுகதை, நாடகத்தை யடுத்த கலைவகை என்று சொல்லலாம். சிறுகதையானது வாமனவதாரத்தைப் போன்ற கலை யுருவம். மனதைக் கவரும் அழகும் அவயவ அந்தமும் பெற்றிருக்கும். குறள் உருவமானுலும் எதையும் மூன்றடிகளில் தாவி அளக்கும் தன்மையைப் பெற்றிருக்க வேண்டும்.

93

நல்ல கதை என்பதற்கு அடையாளம் அதில் யாரேனும் மனதைச் செலுத்திப் படித்தால் உள்ளத்தில் ஒரு அதிர்ச்சி உண்டாகும். இதயத்தைக் கலக்கவோ ஆட்டவோ செய்யும். இது உண்மையேயாயினும், கலை ஞானமும் பயிற்சியும் அடையாமல் கண்ணீர்ப் பெருக்கு உண்டாக்கவே எத்தனித்தால், நல்ல கதை உண்டாகாது. நிகழ்ச்சிகள் முதிர்ந்து உருப் பெருமல் உணர்ச்சிவேகத்தை உண்டாக்க முயன்ருல், எழுத் தாளர் தோல்வி அடைவார்; அது புகைபோட்டுக் காயைப் பழுக்கவைத்தது போலாகும். எளிதில் ஒழுகும் கண்ணீர் கலைக்கு உதவாது. கலையில் காண வேண்டிய உணர்ச்சி, கம்பீரம், இயற்கை, உண்மை, மனித வாழ்க்கைக்குப் பயன் படும் தன்மை இவை இருக்க வேண்டும். எவ்விதத்திலாவது தனிப் பண்பு பெற்றதாகவும் இருக்க வேண்டும். பண்பில்லாத பொருளுக்கு இலக்கியத்தில் இடமில்லை.

94

முறை தவறிய காதலை எடுத்துக்கொண்டு சித்தரிப்பது எளிது. கதையும் கவர்ச்சியாக அமையும். ஆனல் அது மக்களுக்குப் பயன்படாது. காரண காரிய விதி வாழ்க்கையில் எவ்வாறு வேலை செய்கிறது என்பதை விளக்குவதற்காக நெறி தவறிய காதலைப் பற்றிக் கதைகள் எழுதப் பெறலாம். ஆனல், விஷம் கலந்த மருந்துகளைப்போல், அது மிக்க ஜாக்கிரதை யாகவே கையாளப்பட வேண்டும்.

95

இப்போது சில சிறு கதைகளைப் பார்த்தால், நண்பர்கள் தங்கள் மனைவிமார்களைக் கோஷாவில்தான் வைத்துக் காப்பாற்ற வேண்டும்போல் இருக்கிறது. ஆணும் பெண்ணும் சேர்ந்து பேசுவதே அபாயம் என்று இப்போது வெளியாகி வரும் கதைகளினால் ஏற்படும்போ லிருக்கிறது. கதையில், ஒருத்தியை ஒருவன் சந்தித்ததுமே தருமத்திற்கு அபாயம் நேரிட்டுவிடுகிறது. இத்தகைய இலக்கியத்தை உண்டாக்குவது எளிது; விற்பதும் எளிது. கள்ளிப் பலகையில் தச்சு வேலை செய்வது எளிது. ஆனால் அப்படிச் செய்த சாமானில் உறுதியில்லை; பயனும் இல்லை. வழி புரண்ட காதலைக்கொண்ட அவசரமாகத் தோற்றுவிக்கும் சிறு கதைகளும் இவ்வாறே பயனற்றவை என்பதோடு நிற்பதில்லை. இலக்கியம் என்று ஏமாற்றிச் சமூகத்திற்கு விஷம் ஊட்டுவது போலாகும்.

96

எல்லாம் மிகவும் அற்புதம். வெகு தூரத்தில் போடும் சப்தம் இங்கே வந்து சேருவதும், யந்திரத்தால் ஆகாசத்தை மடக்கி ஆளுவதும், எல்லாம் பெரிய வெற்றியே. ஆனால் பயன் என்ன? போடும் சப்தம், கேட்கும் பேச்சு, பாடும் பாட்டு இவை நல்லவையானால் பயன் உண்டு. கழுதைகள் எங்கிருந்து கத்தினாலும் ஒன்றே. கிராமத்தில் மேயும் கழுதையானா லென்ன, சீமையில் கத்தும் கழுதையானா லென்ன? கட்டை வண்டிக்குப் பதில் ரயிலும் மோட்டாரும் வந்து திருடர்களையும் மோசக்காரர்களையும் ஊரில் வேகமாய்க் கொண்டு வந்து தள்ளுவதா யிருந்தால், 'வேண்டாமப்பா, கட்டை

வண்டியே போதும்' என்போம். வெகு தூரத்தில் பேசும் பேச்சு நமக்கு நன்மையும், சுகமும், நல்லறிவும் தருவனவாக இருந்தால் ஆகாசவாணி பயன் தரும். இந்தச் சென்னை ரேடியோ யோக்கியர்களையும், அறிவாளிகளையும், நல்ல பாடகர்களையும் கண்டு அவர்களின் உதவி பெற்று நன்மை தரும் பேச்சும், சாந்தம் தரும் பாட்டும் சம்பாதித்துத் தரவேண்டும்.

97

நமது ஆந்திர சகோதரர்கள் உடனே தனி மாகாணம் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதை நான் எப்படி உடனே கொடுக்க முடியும்? பிரிவினைக்கான பூர்வாங்க வேலைகள் இப்போதுதான் ஆரம்பமாகி யிருக்கின்றன. துரதிருஷ்டவசமாக நான் ஒரு தமிழனாக இருக்கிறேன். உங்களில் சிலர் ஆந்திர மாகாணத்தைப் பிரிப்பதில் எனக்கு இஷ்டமில்லை என்று நினைக்கிறீர்கள். இது சுத்தத் தவறு. உண்மையில் எனக்குத் தான் உங்களைக் காட்டிலும் அதிக ஆர்வம் இருக்கிறது. ஆனாலும் ஒரு தகப்பனார் தன் பெண்ணைப் புருஷன் வீட்டுக்கு முதன் முதலாக அனுப்பும்போது கண்ணீர் விடுவது இயற்கை. பெண், புருஷன் வீட்டிற்குப் போவது அவசியமாக இருந்த போதிலும் பெற்றோர்கள் அதற்காகச் சந்தோஷமாக அனுப்பி விட மாட்டார்கள். அதைப் போலவே ஆந்திர மாகாணமாகிய பெண்ணைப் பிரித்து அனுப்புவதிலும் எனக்குச் சந்தோஷமில்லை.

• 98 •

"பிரிட்டன் போன்ற நாடுகளில் நடப்பதைப்போல் இங்கேயும் தற்காப்பு ஏற்பாடுகளைக் காப்பி அடிப்பதில் பிரயோசன

மில்லை. அங்கெல்லாம் பகலில் படையெடுப்பு ஏற்பட்டால் அதைச் சமாளிக்கப் போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அத்தகைய பாதுகாப்பு ஏற்பாடு இங்கு இல்லாத போது இரவில் மாத்திரம் விளக்கணைப்பு ஏற்பாடு செய்வதால் என்ன பிரயோசனம்? இது கூரையில்லா வீட்டின் கதவை மட்டும் பூட்டி வைப்பது போல் ஆகும்.''

• 99

"ராஜாஜி பதவிக்கு ஆசைப்படுகிறார்'' என்பதாகத் தினப் பத்திரிகை ஒன்றில் கார்ட்டூன் சித்திரத்தின் மூலம் தெரியப் படுத்தி இருக்கிறார்கள். மேற்படி கார்ட்டூனில் என்னைச் சீதையாகவும், மகாத்மாஜியை ராமனாகவும், பதவியை மாய மானாகவும், லக்ஷ்மணனைப் பொதுஜனமாகவும் ஒப்பிட்டு வரையப்பட்டிருக்கிறது.

"கார்ட்டூனில் உள்ள கருத்து ரொம்பவும் முக்கியமானது. பதவிக்கு நான் ஆசைப்படுவது உண்மையென்றால், அதனால் நாட்டுக்கு நன்மையே தவிர தீங்கில்லை. சீதை ராமாயணத்தில் மாய மானை விரும்பியதால் அல்லவா ராவணன் அழிந்தான்? அதைப் போலவே நான் பதவி என்னும் மாய மானுக்கு ஆசைப் பட்டால்தான் பிரிட்டிஷ் ராவணனும் சீக்கிரமே அழிந்து போவான்.''

• 100 •

குழந்தை ஜனிக்கப்போகும் சமயத்தில் தாயாருக்கு இடுப்புவலி காண்பது இயற்கை. இப்போது நாட்டில் அங்

கங்கே வகுப்புக் கலவரங்கள் தோன்றி இருப்பது சுதந்திரக் குழந்தை பிறக்கப்போவதற்கு அறிகுறியாகும். ஆகையால் அதைக்கண்டு நாம் பயப்படக்கூடாது. சுகப்பிரசவத்திற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

101

வியாபாரியிடம், தராசில் சாமான் வைக்கும் தட்டில் எடையை வைக்கச்சொல்லி, எடை வைக்கும் தட்டில் சாமான் களை வைக்கச் சொன்னால் மறுப்பான். இதில்தான் சூட்சுமம் இருக்கிறது. இதைப் போலவே பிரிட்டிஷ் சர்க்கார் போடும் திட்டங்களுக்கு நாம் மாற்றுத் திட்டங்கள் சொன்னால் அதை அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். அதில் சூது இருப்பதே இதற்குக் காரணம்.

102

நான் இடைக்கால சர்க்காரில் மந்திரிப் பதவி வகிக்கப் போவதைப் பாராட்டிச் சிலர் பேசினார்கள். அது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால், ஆபரேஷன் செய்து கொள்ளப் போகும் ஒரு மனிதனைப் பார்த்து, 'அப்பா! நீ ரொம்ப அதிருஷ்டசாலி; பூர்வ ஜன்மத்தில் நீ செய்த புண்ணியத்தினால்தான் உனக்கு ஆபரேஷன் செய்து கொள்ளும்படியான பாக்கியம் கிடைத்தது. உன் யோகமே யோகம்' என்று சொல்லுவது போலிருக்கிறது.

103

காந்திஜி மறைந்துவிட்டார் என்பதை உணருவதே நமக்குக் கஷ்டமாக இருக்கிறது. மிகவும் சிறந்த, அழகான பூ ஒன்று நம்முடைய தேசத்திலே மலர்ந்தது. அது வாடிப் போய் விட்டது. நாம் அதை எரித்து அதன் சாம்பலைக் கங்கையில் கரைத்து விட்டோம்.

அந்த மலர் இனி இல்லாவிட்டாலும், அதிலிருந்த அத்தர் நமக்குக் கிடைத்திருக்கிறது. காந்திஜி நமக்குக் கற்றுக் கொடுத்த சத்தியமும், அன்பும்தான் அந்த அத்தர்.

புஷ்பத்துடன் அத்தரையும் நாம் கங்கையில் கொட்டி விடலாமா? கூடாது; அத்தரைப் பத்திரமாக வைத்திருப்போம். காந்தி மகானுடைய உத்தம போதனைகளைப் பக்தி சிரத்தையுடன் நம்முடைய இதயங்களிலே வைத்துப் போற்றுவோம்.

104

ஒரு பெண்ணின் தந்தை தம் பெண்ணைப் புக்ககத்தில் கொண்டுபோய் விட்டுவிட்டுத் திரும்புகையில், சம்பந்திகளிடம் தம் பெண் ஏதாவது குற்றம் குறைகள் செய்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது, பெண்ணை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறார். சம்பந்திகளும் அவ்வாறே நடந்து கொள்வதாக வாக்குக் கொடுக்கின்றனர். இருந்த போதிலும் பெண்ணின் தந்தை கவலையுடனேயேதான் திரும்பு கிறார். அதேபோல் காங்கிரஸ் சர்க்கார் மதுவிலக்கு என்ற தம் பெண்ணைப் பிரிட்டிஷாரிடம் ஒப்படைத்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் சர்க்கார் மதுவிலக்கைப் பற்றி எவ்வளவு வாக்குறுதி கொடுத்தாலும் காங்கிரஸுக்குத் தம் பெண்ணைப் பற்றிய கவலை இருக்கத்தானே செய்யும்? இந்த நிலையில், பொது மக்களாகிய நீங்கள்தான் இத்தப்பெண்ணின் கணவன் ஆவீர்கள். உங்கள் தந்தையாகிய சர்க்கார், பெண்ணைக் கஷ்டத்திற்கு உள்ளாக்கினால் கணவனாகிய நீங்கள்தான் மனைவியைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

105

முதன் முதலாக மதுவிலக்கு சேலம் ஜில்லாவில் ஏன் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது?'' என்று சிலர் கேட்கிறார்கள்.

சேலத்தில் முதன் முதலாக மதுவிலக்கைக் கொண்டு வந்ததால் மற்ற இடங்களைக் காட்டிலும் சேலம்தான் தகுதியான இடம் என்று நினைக்கவேண்டாம். ஏதாவது ஓர் இடத்தில் முதலில் ஆரம்பித்துத்தானே ஆக வேண்டும்? இராவணன் சீதையைக் கொண்டுபோய் அசோக மரத்தின் கீழ் வைத்த காரணம் என்ன? ஆகையால் அசோக மரத்தில் ஏதோ விசேஷமிருக்கிறது என்று அர்த்தமா? ஏதோ ஒரு மரத்தின் கீழ் கொண்டுபோய் விட வேண்டும்; விட்டான். அது அசோக மரமாயிருந்தால் என்ன? வேறு மரமாயிருந்தால் என்ன? இராவணனுக்கு அசோக புஷ்பம் என்றால் ரொம்பவும் பிரியம், அதனால்தான் அசோக மரத்தின் கீழ் கொண்டு விட்டான் என்று கூற முடியுமா? அதைப்போலத்தான் சேலம் ஜில்லாவில் முதன் முதலாக மதுவிலக்கை ஆரம்பிப்பதும்.

106

புதிய அறிவை அடைந்து விட்டோம், நவீன நூல்களைப் படித்துவிட்டோம் என்று நம்முடைய பழைய விழாக்களை விட்டு விடவேண்டாம். புது முறைகளில் அவற்றை அழகு படுத்தி விஸ்தரித்துப் பெருக்குங்கள்.

பாமரர்களும், கல்வி கற்றவர்களும், பணக்காரர்களும், ஏழைகளும் ஒன்று கூடி நடத்தும் விழாக்கள் சமுதாயத்தின் உயிருக்கு உயிர். நாடகத்தில் போட்டுக்கொண்ட பட்சி வேஷத்தை நம்பி, "இனி எனக்கு இறகுகள் இருக்கின்றன; ஆகாயத்தில் பறக்கலாம்" என்று கால்களை வெட்டிக் கொள்ளலாமா? புதுக் கல்விகளை நம்பிப் பழைய சமுதாய விழாக்களையும், வேடிக்கை விளையாட்டுக்களையும் விட்டுவிடுவதும் அப்படித்தான் ஆகும். பூவும் காயுமே பிரதானம் என்று இலைகளை யெல்லாம் பறித்துவிட்டால் சீக்கிரத்தில் செடியே உலர்ந்து போய்விடும். மகிழ்ச்சிக்குரிய விழாக்களையும் விளையாட்டுக்களையும் நீக்கிவிட்டால் சமுதாய வாழ்க்கை வெறும் போட்டியிலும் துன்பத்திலும் சிக்கிக் கொண்டு அழிந்து போகும்.

107

பிச்சைக்காரர்களுக்காகத் தனி விடுதி அமைக்க வேண்டுமென்று கற்பனை செய்வது சுலபம். ஆனால் காரிய சாத்தியம் இல்லை. ஊரில் கொஞ்சம் பிச்சைக்காரர்களா இருக்கிறார்கள்? நகரத்திலும், நகரத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் ஏராளமாய் வியாபித்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குத்

தனி விடுதி கட்டுவது முடிகிற காரியமல்ல. கொசுக்களைப் பிடித்து வைத்துக் கொண்டு விட்டால் கொசு உபத்திரவமே நீங்கி விடும் என்று நினைப்பது போல்தான் பிச்சைக்காரர்களுக்கு விடுதி அமைக்கும் காரியமும்.

108

பதவி வகிப்பதைப் பெருமையாக நினைப்பது, கொம்பில் வர்ணம் பூசியுள்ள வண்டி மாடு, மற்ற எல்லா மாடுகளைக் காட்டிலும் தானே அழகாயிருப்பதாக நினைத்துக் கொள்வது போல்தான்.

109

பாத்திரங்களைச் சுத்தம் செய்தால் பளிச்சென்றுவது போல, தீண்டாமை என்னும் அழுக்கைத் துடைத்து விட்டால் இந்து மதம் பிரகாசமாக விளங்கும்.

110

மலைமேல் ஏறினால், ஏறிய வழி பூராவும் இறங்கித்தான் ஆகவேண்டும். அதுபோல் சிறுகச் சிறுக விட்ட அதிகாரத்தைச் சிறுகச் சிறுகத்தான் கைப்பற்ற வேண்டும்.

111

வயது வந்தவர்களுக்கு எவ்வாறு கல்வி போதிப்பது?

எழுத்துக்களை ஒரேயடியாக அட்டையில் எழுதிக் காட்டி

விடக் கூடாது. அப்படிச் செய்தால் முதியோர்கள் பயந்து போவார்கள். மாடுகளை வண்டியில் கட்டிய பிறகே வண்டியில் மூட்டைகளை அடுக்குவது வழக்கம். அம்மாதிரியே முதியோர்களுக்குக் கல்வி பாரத்தை ஒரே யடியாய்க் காட்டி விடாமல் சிறுகச் சிறுகக் கற்பிக்க வேண்டும்.

112

மனதுக்குச் சாந்தி யில்லாத சமயம் சிலர் பந்தாட்டம், சீட்டாட்டம், 'காரம்' விளையாட்டு இவற்றில் பொழுது போக்குவார்கள். நானோ என்னுடைய மனதுக்குச் சாந்தி யில்லாத சமயங்களில் பாரதக் கதைகளைப் படித்துச் சாந்தி செய்து கொள்வேன். அம்மாதிரி சமயங்களில் நான் படித்தவற்றையே என்னுடைய அறிவுக்கு எட்டிய முறையில் சுருக்கி எழுதியிருக்கிறேன்.

முதன் முதலாகக் கல்கி ஆசிரியரின் தூண்டுதலின் பேரிலேயே மகாபாரதக் கதைகளை எழுத ஆரம்பித்தேன். பிறகு கல்கி பத்திரிகையில் இரண்டரை வருஷ காலம் தொடர்ந்து எழுதி வந்தேன். அந்தக் கதைகளே இப்போது புத்தக ரூபமாக வெளிவந்திருக்கிறது. எப்படி கங்காதேவி தனக்குப் பிறந்த எட்டாவது குழந்தையாகிய பீஷ்மரைக் கொஞ்ச காலம் வளர்த்துப் பிறகு சந்தனு மகா ராஜாவிடம் ஒப்படைத்தாரோ, அம்மாதிரியே கல்கி ஆசிரியர் தமது பத்திரிகையில் இரண்டரை வருஷகாலமாக வளர்த்து வந்த 'வியாசர் விருந்து' என்ற குழந்தையை இப்போது தமிழ்ப் பண்ணை என்ற சந்தனுவிடம் ஒப்படைத்து விட்டார்.

113

தன் குழந்தையை எடுத்துச் செல்வது எந்தத் தாய்க்கும் சுமையாகத் தோன்ருது. ஆனல், அந்தக் குழந்தையின் எடைக்குச் சமமான இரும்பைத் தூக்கச் சொன்னல் அவள் மிகவும் சிரமப்படுவாள். அதைப்போல் சோர்வில்லாமலிருக்கும் முப்பது கோடி மக்களை வைத்துக்கொண்டு வைஸ்ராய் ஜப்பானை சுலபமாக ஜயித்து விடலாம். ஆனல், யுத்த காலத்தில் தேசத்திற்காகச் சண்டை புரியும் போர் வீரனுக்கு மக்களுடைய சோர்வு பெரும் பாரமாகவே தோன்றும்.

114

தேகப்பயிற்சி உடலுக்கு எத்தனை அவசியமோ அவ்வளவு மூளை வளர்ச்சிக்கு சங்கீதமும் அவசியமாகும்.

115

நார் மாம்பழம் தித்திப்பாக இருந்தாலும் புளிப்பாக இருந்தாலும் எல்லாம் ஒன்றுதான். நல்ல மாம்பழத்தில் புளிப்பிருந்தால்தான் வருத்தப்பட வேண்டும். அதுபோல நல்ல பத்திரிகைகளில் எழுத்துப் பிழை இருந்தாலும் வருத்தம் ஏற்படும்.

116

தொழிலாளர்கள் சம்பள உயர்வுக்காகவும், தங்கள் குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டும் எவ்வாறு வேலை

நிறுத்தம் செய்கிருர்களோ, அம்மாதிரி நாங்கள் இன்னும் சில வேலைகள் செய்வதற்காகவும், நன்மைகளை அடைவதற்காகவும், இப்பொழுது வேலை நிறுத்தம் (மந்திரி சபை ராஜிஞமா 1939) செய்திருக்கிருேம்.

117

தாய் பாஷையாகிற நம் தமிழ் பாஷை தேகத்தின் சருமத்தைப் போன்றது. இந்துஸ்தானியோ நாம் அணிந்து கொள்ளும் கோட்டைப் போன்றது. தோலும் அவசியம் தான்; தோலைக் காப்பாற்ற கோட்டும் அவசியம்தான். அம்மாதிரி தமிழ் ஹிந்துஸ்தானி இரண்டு பாஷைகளும் முக்கியமே.

118

பலாப் பழம் நன்ருகப் பழுத்த பிறகு சாப்பிட்டால் ருசியாக இருக்கும். வயிற்றுக்குக் கெடுதலும் உண்டாகாது. காயாக இருக்கும் போதே அவசரப்பட்டு சாப்பிட்டால் வயிற்று வலி எடுத்து விடும். காங்கிரஸுக்கு இப்பொழுது வந்திருக்கும் அதிகாரம் பலாக் காயாக இருக்கிறது. காய் பழுக்கும் வரை பொறுத்திருக்க வேண்டும். அவசரப்பட்டால் பிரயோஜனமில்லை.

119

விளையாட்டுகள் என்ருல் காந்திஜிக்குப் பிடிக்காது என்பது சிலருடைய எண்ணம்; இது தவறு. மகாத்மாவுடன்

முப்பது வருஷ காலம் நான் நெருங்கிப் பழகி யிருக்கிறேன். அவருடைய வாழ்க்கையே உங்களுடைய ஆட்டங்களில் ஒன்று போல் இருந்தது. உங்களில் ஒரு 'கிளப்'பார் எப்படி மனதில் துவேஷமில்லாமலும், நியாய உணர்ச்சியுடனும் இன்னொரு 'கிளப்'பாருடன் போட்டியிட்டு ஆடுகிறீர்களோ, அதேமாதிரி தான் பிரிட்டிஷ் சர்க்காருடன் மகாத்மாஜி போராடினார். காந்திஜியின் போராட்டங்களில் அசத்தியமோ, சூழ்ச்சிகளோ கிடையாது.

120

வண்டியில் பூட்டப்பட்ட மாடுகள் முன்னும் பின்னுமட போகாமல் ஜோடியாய்ப் போனால்தான் வண்டியை நன்கு இழுக்க முடியும். அதுபோல் பொதுக் காரியங்களைச் செய்ய முன் வருகிறவர்களும் ஒன்று சேர்ந்து வேலை செய்தால்தான் காரியங்களைத் திறம்படச் செய்ய முடியும்.

121

இரண்டாவது மகா யுத்தத்தின் போது போர்புரிந்த இந்தியத் துருப்புக்களின் யுத்தத் திறமையை நான் பாராட்டு கிறேன்.

நமது போர் வீரர்கள் இப்பொழுது யுத்தத்தில் ஈடு பட்டுப் போர் புரிவது சென்னைப் பசுக்கள் பால்காரனுக்குப் பால் தருவதைப் போலாகும். பசுக்கள் மனமுவந்து தங்கள் சொந்தக் கன்றுகளுக்குப் பால் கொடுப்பது மாதிரி ஆகாது. அப்படிச் செய்ய வேண்டுமானால் பிரிட்டன் முதலில் இந்தியாவின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வேண்டும்

122

காந்த சக்தியுள்ள இரண்டு முனைகள் தூர தூரத்தில் நிற்கும்போது, இடி மின்னல் முதலிய ஆர்ப்பாட்டங்களுடன் மின்சார சக்தி பரவுகிறது. ஆனால் இந்த முறையில் அந்த சக்தி எவ்வளவோ வீணாகி விடுகிறது. அதற்குப் பதில் காந்த சக்தி யுடைய பொருள் மற்றொரு பொருளுடன் ஒன்று சேர்ந்து விட்டால், எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் மின்சார சக்தி ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் பரவுகிறது. இம்முறையில் மின்சாரசக்தி சேதமில்லாமல் ஓடிப் பயன் படுகிறது. இதைப் போலவே பகைமை முறையில் இடி மின்னல் போன்ற ஆர்ப் பாட்டங்கள் அதிகமாயிருக்கலாம்; ஆனால், அதில் சக்தி யெல்லாம் சிதறிப் போகிறது. அன்பு வழிதான் அதிக பலன் தரக் கூடியது.

123

ஒரு தேசத்துக்கு ரயில் வண்டி மட்டும் இருந்தால் போதாது. ஆகாய விமானமும் வேண்டும். ஹிந்தி பாஷை தேசம் பூராவும் சுற்றிப் பார்ப்பதற்கு ரயில் வண்டி மாதிரி உபயோகப்படும். ஆங்கில பாஷை வெளி தேசங்களுடன் உறவு வைத்துக் கொள்ள ஆகாய விமானம் மாதிரி பயன் படும்.

124

இப்போது நான் வகித்து வரும் கவர்னர் ஜெனரல் பதவியானது பொதுவாகப் பார்ப்பதற்கு மலைப்பாகத் தோன்ற

லாம். ஆனால், எனக்குள்ள வேலையோ மிகவும் குறைவு. நான் வகிக்கும் கவர்னர் ஜெனரல் பதவியானது ஹிந்து ஆலயங்களிலுள்ள முன்வாசல் கோபுரத்தைப் போன்றது. கோபுரத்துக்கு வேலை ஒன்றும் கிடையாது. இதைவிட, நான் வீடுகளிலோ அல்லது ஆலைகளிலோ உள்ள புகைக் கூண்டைப் போல் இருக்கவே விரும்புகிறேன். புகைக்கூண்டு வீட்டுக் குள்ளே அடையும் புகையை மேலே கொண்டுபோய் விடும் காரியத்தைச் செய்கிறதல்லவா?

125

ஒவ்வொன்றுக்கும் நீங்கள் என்னையே எதிர் பார்க்கக் கூடாது. எதிர்பார்த்தாலும் பிரயோஜனமில்லை. வீட்டில் மாமியாரே சமைத்துக் கொண்டிருந்தால் மாட்டுப் பெண் ணுக்குச் சமையலே வராது!

126

நாம் வாழ்க்கையில் அநேகமாய் எல்லாவற்றிலும் விதேசி மோகத்தில் ஆழ்ந்து விட்டோம். தாய் மொழியாகிய தமிழ் நமக்கு இரமிப்பதில்லை. ஆங்கில மொழிதான் சிறந்ததெனக் கருதுகிறோம். துணி உடுத்துவது நாகரிகமில்லை; கோட்டும் ஹாட்டும்தான் நாகரிகம். நம் நாட்டுக் காட்சிகள், நம் நாட்டுப் படங்கள், நம் நாட்டு மனிதர்கள்கூட கண்ணுக்கு நன்றாக இருப்பதில்லை; அயல் நாட்டு காட்சிகள், படங்கள், அயல் நாட்டு மனிதர்கள்தான் அழகாய் தோன்றுகிறார்கள். சாப் பாட்டில்கூட சாதம் சுகமில்லை. ரொட்டிதான் சாப்பிட

வேண்டும். மூக்கும் அயல்நாட்டு செண்டுகளைத்தான் முகர விரும்புகிறது. இப்படி நம்முடைய மற்ற இந்திரியங்களெல் லாம் விதேசி மோகத்தில் விழுந்துவிட, காது ஒன்றுமட்டும்தான் சுதேசியாக இருந்துவருகிறது. அயல் நாட்டு சங்கீதம் எவ்வளவு உயர்ந்ததாய் இருந்தாலும் நமக்குப்பிடிப்பதில்லை; நம்முடைய சங்கீதம்தான் பிடிக்கிறது. இப்படியாக நம்முடைய சங்கிதக்கலை ஒன்றுதான் நம்மையெல்லாம் இந்தமட்டும் சுதேசி களாய், இந்தியர்களாய் வைத்துக் காப்பாற்றுகிறது.

127

அழகு என்பது அன்பே; உடலில் மெய்யாக நிற்பது குணமே. உடலின் ரூபமும், விரூபமும் விவாகமாகும் வரையில் தான். விவாகம் முடிந்து இருவர் உள்ளமும் அன்புடன் கூடியதும் முகமும் உடலும் எங்கேயோ மறைந்துவிடும். இந்த உண்மை ஆணுக்கும் ஒன்றே; பெண்ணுக்கும் ஒன்றே. "அவள் மூக்கைப்பார்", 'அவள் பல்லைப்பார்', என்பதெல்லாம் மற்ற வர்களுடைய பேச்சும் தகராறும். அன்பைக்கண்ட தம்பதி களுக்கு மூக்கும் வாயும் தீர்ந்துபோன விஷயம்.

128

அதிகாரம் செலுத்த ஓர் ஆள் அகப்பட்டால் யாருக்குமே அதில் ஒரு தனி சந்தோஷம். அரசியல் சாம்ராஜ்ய மோகத் தைப் போலவே இயற்கையில் ஒரு சாம்ராஜ்ய வேகம் உண்டு. முக்யமாக ஏழைக் குடும்பங்களில் ஸ்திரீகளுக்கு இந்த ஆசை அதிகம்.

129

காட்டில் போடும் விதைகளெல்லாம் முளைத்துக் கதிர் விடுவதுண்டா? அதற்காகத் துக்கப்படுகிறோமா? அதைப் போல நம்முடைய குழந்தைகளில் ஒன்றிரண்டு இறந்து போய் விட்டால் நாம் துக்கப்படக்கூடாது. ஆண்டவன் கொடுத்தான் ஆண்டவன் எடுத்துக்கொண்டான் என்று நிம்மதியடைய வேண்டும்.

130

மாற்றுந்தாய் பான்மையை பல உருவத்தில் காணலாம். ஒரு சிறு குழந்தையை மருமகளாகப் பெற்ற மாமியாரும் ஒரு மாற்றுந்தாய்தான். ஒரு வேலைக்காரக் குழந்தையை கூலிக் கென்று அழைத்துக் கொண்ட எஜமானியம்மாவும் ஒரு வித மாற்றுந்தாய்தான். நாய்க் குட்டியை வளர்க்கும் ஒரு பெரிய மனிதரும், மாற்றுந்தாய் தருமத்தில் தான் நிற்கிறார். வளரும் உடலும், உள்ளமும் கொண்ட எந்த ஒரு ஜீவனும்—அதைப் பார்த்து வரும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஆணோ பெண்ணோ யாராயினும் சரி—மாற்றுந்தாயும் குழந்தையுமாகத்தான் அமைந்து நிற்கிறார்கள். பெற்றதாயின் அன்பு ஒன்றே இயற்கை அன்பு. மற்ற அன்பு வகைகளுக்கு அதுவே ஆதாரிசமுமாகும். மற்றவர்கள் எல்லோரும் வெகு ஜாக்ரதை யாகவும், பகுத்தறிவுடனும், தெய்வ பக்தியுடனும் தாய்போல் நடந்துகொள்ள வேண்டும். வளரும் குழந்தையின் உடலுக்கு நெய் வேண்டும். குழந்தையின் வளரும் உள்ளத்திற்கு அன்பே நெய்யாகும்; அதை ஊட்டாவிடின் உள்ளம் வரண்டுபோகும்.

131

விழாக்களேப்பற்றி ஒரு வார்த்தை. ஆண்டுக்கு ஒரு முறை கொண்டாடப்படும் பெரிய நோன்புகள் தேசத்தின் பண்பாட்டைக் காக்கும் காவல்களாகும். இவற்றில் என்ன இருக்கிறது, வீண் செலவு, மூடநம்பிக்கைகள் என்று விட்டுவிட்டு நம்முடைய மக்களின் வாழ்க்கையை பாலேவனமாக்கி வருகிருேம். கோயில்களும், கோபுரங்களும், மண்டபங்களும் பாமரப் பாட்டுகளும், கூத்துகளுமே முடிவில் நம்முடைய பெருஞ் செல்வம். நல்ல கலேகளும், உயர்ந்த ஞானமும் ஒருபுறம் இருக்க வேண்டும். கிராம விழாக்களும், பாமரக் கூத்தும், ஆட்டமும் கூட இருக்க வேண்டும். மரங்களும், செடிகளும் இருந்தாலும் மாடுகள் மேயப் பசும்புல்லும் இருக்க வேண்டும். அதைப் போலவே நாகரிகமும். அனேவரும் கூடிமகிழும் விழாக்களேத் தள்ளிவிடுவது மடமையாகும். புதிய இந்தியாவில் பழைய விழாக்களே மறுபடியும் புத்துயிர்தந்து கொண்டாடவேண்டும்.

132

கட்டுரையோ, கதையோ எழுதும்போது சௌகரியமான ஒரு இடத்தில் எழுதுவதை நிறுத்தி அதைப்படித்துப்பார்க்க வேண்டும். நம்முடைய குழந்தையை நாம் பார்ப்பதுபோல் பார்க்கக்கூடாது. புறத்தவர் பார்ப்பதுபோல் பார்க்கவேண்டும். நம்முடைய மனதில் ஏற்கனவே நுழைந்துள்ள பல கருத்துக்களேத் தள்ளிவைத்து, முன் கேட்காத ஒருவன் காதில் அது எவ்வாறு படும், பட்டால் என்ன பொருள்கொள்வான் என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். புதியதாக ஒருவன் சொல்ல நாம் கேட்ப்பதுபோல் கற்பனே செய்துகொண்டு படித்துப்

பார்க்கவேண்டும். அப்போது அதிலுள்ள குறைவு விளங்கும். பொருள் முழுவதும் மொழிகளில் அமையவேண்டும். பொருளின் வடிவம் முழுதும் மனக்கண்முன் நிறுத்திக்கொண்டு அதற்கும் எழுதிய எழுத்துக்கும் ஒத்துப் பார்க்கவேண்டும். வடிவத்தின் ஒவ்வொரு அங்கமும் மொழியில் இருக்கிறதா என்று சோதனை செய்யவேண்டும்.

ஆரம்பத்தில் அழகும் பொருட் செறிவும் கொண்ட முறையில் எழுதி, செல்லச் செல்ல பொருட் செறிவும் சொல் லழகும் குறைந்துபோகக்கூடாது. மொழியழகும், பொருட் செறிவும், கதையின் ரசமும் வர வர அதிகரித்துக் கொண்டு சென்றால்தான் படிப்போர் மனதைப் பற்றிக்கொண்டு செல்லும். கதை, நாடகம், பேச்சு, கட்டுரை எல்லா வற்றிலுமே இது கவனிக்கப்பட வேண்டிய விஷயம். கரும்பு தின்னும்போது நுனியிலிருந்து ஆரம்பித்து அடிப்பக்கம் போகப் போகத்தித்திப்பு அதிகரிப்பதுபோல், எழுத்தைப் படிப்பவர்க ளுக்கு சுவை ஏற்றத்திலிருக்குமாறு மொழியும், பொருளும் அமையவேண்டும்.

133

சிறைக்கு உடல் செல்லுவதால் மட்டும் நன்மை உண்டாய் விடமாட்டாது. சிறைக்குச் செல்வதை நன்மை என்று இருதயம் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். கையைக் குலுக் கினாலும், கட்டியணைத்தாலும் அன்பு அதிகப்படுவது உண்மை தான். அப்படி அதிகப்படுவது இதயத்தில் உண்மையுடன் செய்தால்தான். மனதில் அன்பில்லாமல் கட்டியணைப்பது வெறும் சடங்குமாத்திரமே யாகும். அது போல் சிறைக்குச்

செல்வது தேசபக்தர்கள் செய்யும் காரியம் என்று எண்ணி மட்டும் சிறைக்குச் செல்வதால் நன்மை உண்டாகாது.

134

தியாகையர் 'தமிழ்நாட்டிலிருந்தாலும், பக்தி பெருகியதும், தன் தாய்மொழியில் கீர்த்தனங்கள் பாடினார். மொழியும், பாட்டும், சங்கீதமும், ஒன்று சேர்ந்து ஒருவரே, சங்கீதமும் சாகித்யமும் செய்தார். தானாகவே உண்டாயிற்று அந்த சங்கீதம். நான்கு ஐந்துபேர் சேர்ந்து கொல்லத்து மேஸ்திரி, வீடு கட்டுவதுபோல் நீ செங்கல் கொண்டுவா, நீ சுண்ணம்பு கொண்டுவா, ரயிலில் வருகிறது, ஓடு, நான் எல்லாம் சேர்த்து வீடு கட்டுகிறேன் என்று சொல்வதுபோல் இல்லை. ஆனால், தியாகய்யர் செய்த கீர்த்தனங்கள் அப்படியே அவர் ஆனந்தத்திலிருந்து உண்டாயின. அப்படி உண்டாகும்படியான நிலைமையில் நாமில்லை என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. தியாகய்யருக்கு முந்தி சங்கீதமே இல்லையா? உலகத்தில் எவ்வளவோ பல்லாயிர வருஷம் கழிந்த பிற்பாடும் இருக்கும். புதிதாக உண்டாக்கக் கூடியவர்கள் வருவார்கள். அதற்கு நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அதுவரையில் வேறு ஒன்றும் வேண்டாம் என்று சொல்லக் கூடாது.

135

மரங்களுக்கு சூரிய கிரணங்களைப் போல் சிறுவர்களுக்கு சந்தோஷம் அவசியம். களிப்பின்றி குழந்தை வளர முடியாது. வெறும் எண்ணும் எழுத்தும் படிப்பும் போதிப்பது சூரிய வெளிச்சமில்லாத மரத்திற்கு எரு போடுவது போலாகும்.

136

"இலைகளின்றி மரம் வளராதது போன்றே குழந்தைகளின்றி மனிதன் வளர முடியாது. சிசுக்களிடம் அன்பு காட்டாத மனிதன், மனிதன் அல்ல. குழந்தைகள் தங்களுக்குள் சண்டை போடுவதில்லை. தேகப் பயிற்சிக்காக இலைகளைப் போல் அவர்கள் உராய்ந்துகொள்கின்றனர். ஈரலுக்கு பயிற்சி அளிப்பதற்காக குழந்தைகள் அழுகின்றன, கத்துகின்றன. ஒரு மரத்தின் இலைகளைப் போன்றே குழந்தைகளும் ஜாதிமத வித்யாசமின்றி ஒரே மாதிரியாக உள்ளன. குழந்தைகள் இல்லாவிட்டால் அன்பின் ஊற்று வற்றிவிடும். மரத்தின் இலைகளைப் பிய்த்துவிட்டால், அதன் வேரும் காய்ந்துபோகும்.

137

பகுத்தறிவுடன் பொய்யைத்தள்ளி, உண்மைக் காதலை ஒருவன் கண்டறிந்தாலும், விரும்பினவளிடம் அதற்கொத்த காதல் உண்டாகாமலிருப்பதையும் காண்கிறோம். இருபக்கமும் இயல்பாகவும் பலாத்கார மற்றதாகவும் காதல் உண்டானு லல்லவோ அது வாழ்வைத் தாங்கும் மேடையாகும்? இந்தப் பெரும் பேறு அனைவரும் பெறுதலரிது. ஆனால், தன்பாய்ச்ச லில்லாத வயல்களையெல்லாம் தண்ணீர் பாயவில்லை என்று விட்டுவிட முடியுமா? கிணறு வெட்டியோ, வானத்தை வேண்டியோ சாகுபடி செய்கிறோம். இவ்வாறு பயிர்செய்து, இனிய காய், கனி, கிழங்குகளும், மணமும் அழகுங்கொண்ட பூக்களும் உண்டாக்கலாம். ஆனால் சோம்பலின்றி மனத்தைச் செலுத்திப் பக்தியுடன் பயிர்செய்யவேண்டும். உண்மைக் காதல் ஏற்படுதல் அரிதுதான்; கண்டாலும் அதற்கு

இணையாகப் பிரதிகாதல் பெறுவது அதனிலும் அரிது. இரண்டும் பெற்றாலும் அக்காதலைக் காப்பது எல்லாவற்றிலும் அரிது. ஏற்பட்டகாதலைக் காத்தலும், அதுபோகச் சர்வ வியாபகமாய் மறைந்து கிடக்கும் அவ்யக்த காதற் செல்வத்தை வெளிப்படுத்தி வளர்த்து வாழ்க்கைத் துணையாக மனைவியை ஆக்கிக்கொள்ளப் பயில்வதுமே இளைஞனுடைய தர்மம். இதற்குப் பகவானுடைய அருள்வேண்டும்; நாமும் பாடுபட வேண்டும்.

138

விவாகத்துடன் காரியம் முடிந்தது என்று எண்ணுவது அறியாமையாகும்.

காதல் மணமாயினும் சரி, சம்பிரதாய மணமாயினும் சரி, யுத்தம் பின்னால்தான். அதில் வென்றாலொழிய வெற்றி யில்லை, சுகமுமில்லை.

மணம் செய்த பின்தான் குருக்ஷேத்திரம். வாழ்க்கை முழுதும் ஒரு யுத்தகளம். மனத்தூய்மைக்குப் பல சோதனைகள் நேரிடும். தெருவிலும், வண்டிகளிலும், பலர் கூடி விருந்து கொள்ளும்போது காதலுக்குத் தக்க உயர்ந்த பாத்திரங்கள் போல் முகங்களும் குணங்களும் பல தோன்றும். கொண்ட மனைவியைத் தாழ்த்தும் பல எண்ணங்களும் தோன்றும். அவைகளைக் கவசம்பூண்டு எதிர்த்து வெல்ல வேண்டும்.

139

சர்க்காரனது எல்லா பணக்காரர்களும் வருத்தமடையும் படியான காரியங்களைச் செய்திருக்கிறது. ஏழைகளைத் திருப்தி

செய்விப்பதில் அவர்கள் (சர்க்கார்) இன்னும் வெற்றிபெற வில்லை. பணம், இருக்கும் இடங்களிலிருந்து வெளிக் கிளம்புவது சிரமமாக இருக்கிறது. பணம் நெருக்கிடங்களில் போய் தங்கியிருக்கிறது. தேங்கியிருக்கும் ஜலம் கொசுவையும், ஜுரத்தையும் உண்டாக்குவது போல முதலீடு பண்ணாமல் தேக்கப் பட்டிருக்கும் பணம் விலைகளை உயர்த்துகிறது லஞ்சம் ஊழல்களை உற்பத்தி செய்கிறது ஒழுக்கத்தைக் கெடுக்கிறது.

140

நம்முடைய விருப்பம்போல் மழை பெய்வதுமில்லை. வெயில் காய்வதுமில்லை. அதற்காக நாம் அவை வேண்டாம் என்று கூறுவதில்லை. அதுபோல் நாட்டில் நாம் விரும்பும் காரியங்கள்தான் நடைபெற வேண்டுமென்பதில்லை. நல்ல காரியங்கள் எதுவானாலும் நடைபெற வேண்டியதுதான்.

141

ஸ்நானம் செய்வது எப்படிக் கஷ்டமான காரியமாக இல்லையோ அதுபோல்தான் தோட்டி வேலையும் நமக்கு கஷ்ட மான காரியமன்று.

142

மரணம் என்பது கரும்பலகையில் எழுதியதை அழித்து விடுவதுபோன்றதன்று. கணக்கு புத்தகத்தில் ஒருபக்கத்தின் இறுதியில் காணும் வரவு செலவு பாக்கியை அடுத்தபக்கத்தில்

எழுதி கணக்கைத் தொடர்ந்து பார்ப்பது போன்றதே யாகும். அதனால் நாம் இறப்பதாகத் தோன்றினாலும் ஒரு நாளும் இறப்பதில்லை.

143

பகைவனுடைய சேனையிலுள்ள வீரர்களில் ஒருவருக்குக் கோட்டைக்குள் புக இடங்கொடுத்து விட்டால் எப்படி வீரர்கள் எல்லோரும் புகுந்து விடுவார்களோ அப்படியே மனதிற்குள்ளே ஒரு கெட்ட எண்ணத்துக்கு இடங்கொடுத்து விட்டால் பிறகு கெட்ட எண்ணங்கள் அலை அலையாக வந்து விடும்.

144

பறவையினுடைய சிறகுகளும், மனிதனுடைய கைகளும், குதிரையினுடைய வாலும், பசுவினுடைய கொம்பும் எப்படி நன்மை பயப்பனவாகவும் தீமை பயப்பனவாகவும் உளதோ அப்படியேதான் சமூக பழக்கவழக்கங்களும் நன்மை பயப்பனவாகவும் தீமை பயப்பனவாகவும் உள. நாம், கைகளுக்குப் பதிலாக சிறகுகள் இருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்றும் எண்ணலாம். அப்படியே பசுவின் கொம்பும் குதிரையின் வாலும் இருந்தால் நல்லது என்றும் எண்ணலாம். ஆனால் அப்படி எண்ணுவது முற்றிலும் தவறே. நான் கூறுவதை வேறுவிதமாகப் பொருள் கொண்டுவிட வேண்டாம். நான் கூறும் உதாரணங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் வேறுபாடு உண்டு என்பதை அறிவேன். பறவை கைகளை அடைய

முடியாது. மனிதன் சிறகை அடைய முடியாது. ஆனால் நாம் நம்முடைய பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள முடியும். ஆம் பறவைகளுடைய உடலையும் மிருகங்களுடைய உடலையும் மாற்ற முடியாது, பழக்க வழக்கங்களை மாற்ற முடியும். ஆயினும் பழக்க வழக்கங்களை மாற்றுதவரை அவற்றால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. நமக்கு எது இல்லையோ அதற்காக வருந்த வேண்டியதில்லை. பழக்க வழக்கங்களை மாற்ற முயன்ற போதிலும், அப்படி மாற்ற முயலும் காலத்தில்கூட அவற்றால் அடையக் கூடிய நன்மைகளை அடைய முடியும்.

145

மாவை சுடுதண்ணீரில் கரைக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? மாவின்மீது சுடுதண்ணீரை அப்படியே மொத்தமாக ஊற்றினால் மாவு கறையாது, கட்டியாக போய் விடும். அதனால் முதலில் குளிர்ந்த நீரில் கலந்து கொண்டு பிறகு மெதுவாகச் சிறிது சிறிதாக சுடுதண்ணீரைக் கலந்தால் மாவை சுடுதண்ணீரில் கரைத்து விடலாம். ஆகவே பலவந்த முறையால் எதையும் சாதிக்க முடியாது. அறிவு புகட்டும் முறையால் தான் முடியும். இந்த உவமை மாவுக்கும், சுடு தண்ணீருக்கும் பொருந்துவது போலவே மக்கள் மனத்துக்கும் பொருந்தும்.

146

எல்லாரும் எம். எல். ஏ. க்கள் தான். ஆனால் காங்கிரஸ் எம். எல். ஏ. க்கள் வாயில் கடிவாளம் பூட்டப்பட்ட குதிரை

களுக்குச் சமானமானவர்கள். கடிவாளக் கயிறு, ஓட்டுவதில் கெட்டிக்காரன் கையில் இருக்கிறது. இந்தக் குதிரைகள் சாலையில் போகும் பொழுது சேர்ந்து போக வேண்டும். சுவடு தப்பிப் போகக் கூடாது. கொஞ்சம் தவறினாலும் மேலே இருந்து ஹை கமாண்டு சவுக்கடி கொடுக்கும். ஆனால் மற்ற எம். எல். ஏ. க்கள் அப்படியல்ல. அவர்கள் லகான் இல்லாத குதிரைகள். அவர்கள் வழி தனி. தவறு ஏற்பட்டால் சவுக்கடி கொடுப்பவரோ கடிவாளத்தை இழுத்துப் பிடித்து நேரான பாதையில் ஓட்டுபவரோ யாரும் கிடையாது. அப்படி யிருக்கும் பொழுது அவை இழுக்கும் வண்டியின் நிலைமை என்ன ஆகும் என்று சொல்லவும் வெண்டுமா ?

147

உலகத்தில் அநேக விதமான மரங்களும் இருக்கின்றன ; மிருகங்களும் இருக்கின்றன ; அவைகள் எல்லாம் வேறு வேறானவை. அதே போல் உலகத்திலுள்ள பலதேச மக்க ளுடைய வழக்கங்களும் சமூகப் பழக்கங்களும் வேறு வேறானவை.

148

ஒரு பையனுக்கு ஓடக்கற்றுக் கொடுக்க விரும்புகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நாம் அவனுக்கு முன்னால் ஓடிவிடமாட்டோம். அவன் கூடவே ஓட முயன்று அவனுக்குக் கற்பிப்போம், அதுபோல் தவறான வழக்கங்கள் உடையவர்களைத் திருத்துவதற்கும் அவர்களை விட்டு விட்டு

முன்னால் போய்விடலாகாது. அப்படிப் போவது அன்பு முறையாகாது.

149

மேகமில்லாமலுள்ள வானத்தை இரவில் பார்த்தால் எத்தனையோ நட்சத்திரங்கள் காணப் பெறுகின்றன. தூர திருஷ்டிக் கண்ணாடி மூலம் பார்த்தால் வானத்தின் ஒரு சிறு பகுதியில் மட்டுமே சாதாரணமாகக் கண்ட அத்தனை நட்சத்திரங்களையும் காணலாம். அதுபோல் பிரபஞ்சம் எல்லையற்றது. எதையும் முற்றிலும் அறிய முடியாது என்று காண்பதே அறிவிலும் அறிவாகும். எதையும் முற்றிலும் அறிய முடியாது. ஏதோ அரை குறையாகவே அறிய முடியும். ஆழ்ந்து ஆராய்ந்தால் மிகத் தெளிவான விஷயம் என்பதுகூட பரம ரகசியமாகவே தோன்றும்.

150

தற்கால விஞ்ஞானம் கண்டு பிடிப்பவை எவையும் சமயத்தை மறுக்கவில்லை. இரண்டும் ஒரே விதமானவை என்றே நான் கருதுவதால் அவ்விரண்டுக்கு மிடையில், எனக்கு எவ்வித முரண்பாடும் இருப்பதாகத் தோன்றவில்லை. பத்து வயதுச் சிறுமியை மணப்பதோ பதினாறு வயது விதவையின் தலையை மொட்டையடிப்பதோ ஹிந்து சமயம் என்று கருதாதீர்கள். பூணூலைத் தோளில் போட்டுக் கொள்வதும் பலவிதமாக நெற்றிக்கு யிட்டுக்கொள்வதும் ஹிந்து சமயமாகாது. இவை எல்லாம் ஹிந்து சமயமாகிய சமுத்திரத்தின் மீது

அவ்வப்பொழுது தோன்றும் அலைகளாகும். அலைகள்தான் சமுத்திரம் என்று எண்ணிவிடாதிர்கள். அலைகள் மறைந்து விடலாம் ஆனால் சமுத்திரமோ எப்பொழுதும் உள்ளதாகும். இப்பொழுதுள்ள வழக்கங்களை யெல்லாம் விட்டு விட்டாலும் நாம் ஹிந்துக்கள்தான், முஸ்லிம்களாகவோ கிறிஸ்தவர்களாகவோ நாஸ்திகராகவோ ஆயிவிடமாட்டோம்.

151

ராமன் என்று ஒரு மனிதனைப் பார்ப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். ராமன் என்று யாரைக் கூறுகிறோம்? ராமன் என்பது அவனுடைய கையும் காலும் தலையுமல்ல. அம்மை வந்து முகம் மாறினாலும் கண்ணிழந்து குருடானாலும், காலிழந்து நொண்டியானாலும் அதே ராமன்தான். ஆம் மனிதன் என்பவன் உடலன்று, அவனுடைய எண்ணங்கள் உணர்ச்சிகள் ஆகியவையாகும் என்று கூறுவீர்கள். அப்படிச் சொல்வதும் சரியன்று. எண்ணங்கள் மாறினாலும் அதே மனிதன்தானே ஆகவே மனிதன் உடலுமன்று, எண்ணங்களுமன்று. எண்ணங்களுக்கு ஆதாரமாக யிருந்து எண்ணுவதும் பேசுவதும் செய்வதும் நடத்துபவனே மனிதன். இதுவே சகல சமயங்களுக்கு அஸ்திவாரமான கொள்கையாகும்.

152

ஹிந்து சமயத்தின் சாரம் என்று எதை நான் அறிந்திருக்கிறேனே அதை உங்கட்குச் சொல்ல விரும்புகிறேன். காரணமுள்ள இடத்திலெல்லாம் காரியம் இருக்கவே செய்யும். தண்ணீரில் ஒரு அலை உண்டாகும். அந்த அலை மற்றொரு அலையை உண்டாக்கும். கடவுள்கூட அதைத் தடுக்க முடியாது என்று

கூறலாம். இரண்டோடு இரண்டைச் சேர்த்தால் நாலாகும். அதைக் கடவுள் மாற்றியமைக்க முடியுமா? இந்த விஷயத்தை உணர்ந்துகொண்டால்தான் ஹிந்து சமயத்தின் சாரம் என்று நான் கருதுவதை நீங்கள் அறிந்துகொள்ள முடியும்.

நம்முடைய மனத்தில் தோன்றும் ஒவ்வொரு கெட்ட எண்ணமும் கடவுளாகிய நீரில் தோன்றும் துன்பகரமான அலையாகும். அதைக் கடவுள் இதயத்தைப் பிளக்கும் குத்து என்று கூடக் கூறலாம். அதனால்தான் சில ஞானிகள் நாம் கெட்ட எண்ணங்களை எண்ணும்பொழுது கடவுள் கண்ணீர் விடுவதாகக் கூறுகிறார்கள். அமெரிக்காவில் பேசுவது இங்கே கேட்கிறது. அது எப்படி என்பது நமது கண்ணுக்குப் புலனாகவில்லை. அதே போல் கெட்ட எண்ணங்களும் கண்ணுக்குப் புலனாகா விட்டாலும் கடவுளைப்போய் பாதிக்கின்றன என்று கூறலாம். ஏதோ மார்க்கொனி என்னும் ஒரு ஐரோப்பியன் கண்டுபிடித்தது கம்பியில்லாத் தந்தி என்று கருத வேண்டாம். இது பண்டைக்கால முதல் நடந்துவரும் ஒரு காரியமேயாகும். இத்தகைய காரியங்கள் இலட்சக் கணக்கான ஆண்டுகளாக நடந்து வருகின்றன. விஞ்ஞானிகள் இப்பொழுதுதான் கண்டு கொண்டிருக்கிறார்கள்.

153

செவிடன் உலகத்தைப் பார்க்கிறான் அதில் எதையும் கேட்க முடியவில்லை. திடீரென்று காது கேட்கிறது. இது வரை இத்தனை சப்தம் எல்லாம் எங்கிருந்தது, நான் கேட்கவில்லையே என்று ஆச்சரியப்படுகிறான். அதே போல் உலகத்தில் உலவும் நல்ல எண்ணங்களையும், தீய எண்ணங்

களையும் அறியக் கூடிய சக்தியில்லாதபடி ஆன்மச் செவிட்டுத் தன்மையும் ஒன்றிருக்கிறது. இந்த ஆன்மச் செவிட்டுத் தன்மையை அகற்றி விட முடியுமானால் உடனே உலகமெங்கும் பரவி நிற்கும் எண்ணங்களை எல்லாம் அறியும் சக்தியைப் பெற்றுவிடுவோம். அப்பொழுது "ஆகா இவ்வளவு தீமை உலகில் நடமாடுகிறதா, நாம் அறியாமல் இருந்துவிட்டோமே, அதைத் தடுக்க வேண்டாமா" என்று ஆச்சரிய முறுவோம். பகல் முழுவதும் மனத்தில் துக்கம் நிறைந்திருந்த போதிலும் இரவில் தூக்கம் வந்ததும் அதை மறந்து இன்பமாகத் தூங்குகிறோம். அதனால் உறக்கத்தை ஒரு வரப்பிரசாதமாகவே எண்ணுகிறோம். அதேபோல், உலகில், தீய எண்ணங்கள் நிறைந்திருப்பதால், அவற்றை அறியாமலிருந்து மனச் சமாதானத்துடன் வாழ்வதற்காகவே, கடவுள் நமக்கு இந்த ஆன்மச் செவிட்டுத் தன்மையை அருளியிருக்கிறார்.

154

உறங்க வேண்டிய சமயத்தில் சிலர் உறங்காதபடி விளக்கு ஏற்றி வைத்துக் கொண்டு படிக்க உட்காருகிறார்கள். அதே போல் கடவுள் நமக்கு ஆன்மச் செவிட்டுத் தன்மையை அருளி யிருந்த போதிலும், அதைப் பொருட்படுத்தாமல் சில பைத்தியக் காரர்கள் உலகில் நடமாடும் தீய எண்ணங்களைத் தங்கள் ஆன்மாவில் கேட்டறிய முயல்கிறார்கள். இதுதான் சமய விசாரணை என்பதும், தத்துவ போதனை என்பதுமாகும். விளக் கேற்றி வைத்துக்கொண்டு புஸ்தகம் படிப்பவரைப் பாருங்கள். சிறிதுநேரம் படிப்பார், பிறகு சோம்பல் உண்டாகிவிடும் உடனே விளக்கை அணைத்துவிட்டு உறங்க ஆரம்பித்து விடுவார்.

அதே போல் சமய விசாரணையில் ஈடுபடுகிறவர்களும் சோர்வு உண்டாகி தூங்க ஆரம்பித்து விடுவார்கள். ஆனால் உபநிஷத்துக்களை பாடியவர்களைப் போன்றவர்களையும், மேனாட்டில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்கிறவர்களைப் போன்றவர்களும் விளக்கை அணையாமல் உண்மையை அறியப் படாத பாடு படுவார்கள். அவர்கள் முடிவுதான் சமயம், அவர்களுடைய உழைப்பைத்தான் விஞ்ஞானம் என்கிறோம்.

155

செயல் என்பதில் செயல் மட்டுமின்றி எண்ணமும் மொழியுங்கூட அடங்கும். உதாரணமாக பிறர் பொருளைக் கண்டு பொறாமையுற்றால் அதுவும் ஒருவிதமான திருட்டே யாகும். திருட்டு பலவகைப் படுவதால் இந்தத் தீய எண்ணமும் அந்த வகையில் ஒன்றே.

156

நாம் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டால் நாம் வியாதியால் பிடிக்கப்படலாம். பெண்வியாதி எதுவும் நேரா விடினும், நம்முடைய தீய செயலால் தவறாமல் பிடிக்கப் படக்கூடிய ஒரு வியாதி இருக்கவே செய்கிறது. அத்தகைய வியாதி யாது? நாம் ஒரு காரியத்தை ஒரு தடவை செய்ய ஆரம்பித்துவிட்டால், பிறகு அதைத் திரும்பச் செய்ய ஆசை உண்டாய் விடுகிறது. அதை மறுபடியும் செய்வதற்குத் தகுந்தவர்களாக நம்மை ஆக்கிக் கொள்கிறோம். அதேபோல் தீய எண்ணத்தை ஒரு தடவை நம்முடைய மனத்தினுள்

நுழைய விட்டு விட்டால் பிறகு அது மறுபடியும் எளிதில் நுழைவதற்கு உரிமை பெற்றதாக ஆகிவிடுகின்றது. நான் ஏச்சு மொழிகள் உபயோகிப்பதில்லை. அதை உபயோகிப்பது எனக்குக் கஷ்டமாகத் தோன்றுகிறது. ஆயினும் ஒரு முறை உபயோகிக்க ஆரம்பித்துவிட்டால், மறுமுறை உபயோகிப்பது எளிதாக ஆகிவிடும். மெழுகினுல் செய்த பொம்மையை மெதுவாக தொட்டாலும் உருவம் மாறிவிடும் அதைவிட மெல்லியது நம்முடைய மனம். அதனுல் மிகச்சிறிய தீய எண்ணங்கள் கூடப் போதும் அதைப் பழுதாக்கிவிடுவதற்கு.

157

நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நம்முடைய ஒழுக்கத்தைச் சாசுவதமாகப் பாதிக்கின்றது. ஆகவே நாம் இரண்டு விதமான காரணங்களுக்காக தீமைக்கு அஞ்சவேண்டும். இறந்த பின்னரும் நம்முடைய ஒழுக்கம் நம்முடைய ஆன்மாவுடன் செல்லும் என்று நம்புவோமானுல், நம்முடைய ஒழுக்கத்தை தூயதாக வைத்துக்கொள்வது நூறுமடங்கு அதிக முக்கியமானதாகும். மற்ருெரு காரணம் நாம் நம்முடைய தீமையால் நம்முடைய மனத்தை உடனேயே கெடுத்துக் கொள்கிரும் என்பதாகும். பிறர் பொருளைக்கண்டு பொருமைப்பட்டால், உடனே நமக்கு ஒரு அசங்கியமான வால் முளைத்துவிடும் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானுல் யாரும் பொருமைப்படமாட்டார்கள் அல்லவா? ஆனுல் பிறர் பொருளுக்காகப் பொருமைப் படுவதால் நம்முடைய ஒழுக்கத்தில் உண்டாகும் வால், குரங்கின் வாலைவிட அசங்கியமானதாகும். உடம்பில் வால் முளைப்பது அசங்கியமாயிருப்பதைவிட

அதிக அசங்கியமாயிருக்கும் நம்முடைய தீய எண்ணங்களாலும் தீய செயல்களாலும் நம்முடைய ஒழுக்கம் பழுதாவது.

158

நல்ல செயல் செய்தால் நம்முடைய ஒழுக்கம் அழகு பெறுகின்றது. தீய செயல் செய்தால் அந்த அளவுக்குத் தகுந்த வண்ணம் நம்முடைய ஒழுக்கம் பழுதாகி விடுகின்றது. எது செய்தாலும் நாம் இந்த விஷயத்தை நினைவில் வைத்துக் கொண்டே செய்யவேண்டும். நான் ஒரு நண்பர் வீட்டுக்குச் செல்கிறேன். நான் தேநீர் குடிக்கும் வழக்கமில்லை. அவர் தருகிருர். அதைக்குடிக்கிறேன். அந்த அளவுக்கு தேநீர் குடிப்பவன் ஆகிவிடுகிறேன். அடுத்தநாள் அதை அதிகத் தயக்கமின்றி குடிப்பேன். மூன்ருவது நாள் நானே அதைத் தேடுவேன். இன்று பொய்பேச ஆரம்பித்தால் அந்த அளவுக்குப் பொய்யன் ஆகிவிடுகிறேம். மறுமுறை பொய் பேசத்தயங்கிளுலும் மூன்றும் முறை நாமாகவே பொய்பேச ஆசைப்பட்டு விடுகிறேம். நம்முடைய ஒழுக்கம் அடியோடு நாசமடைந்து விடுகின்றது.

159

நம்முடைய எண்ணமும், செயலும் நம்முடைய ஒழுக்கத்தைத் தாக்குவது உண்மைதான். ஆனல் அதே சமயத்தில் நாம் அதை பழுது பார்த்துச் சரிப்படுத்த முடியும் என்பதும் உண்மையாகும். பித்தளையாலோ, இரும்பாலோ ஒரு உருவம் செய்கிறேம். அதைத் தவருக அடித்துவிட்டால் பழுதாய்

விடும். ஆயினும் மறுபடியும் அடித்து அந்தப்பழுதை நீக்கி நல்லதாகச் செய்துவிடுகிறோம். அதேபோல் நம்முடைய ஒழுக்கத்தையும் நல்லதாகச் செய்துவிடலாம். ஒரு அடி ஒரு பயன் தந்தால் மறு அடி அதை மாற்றி அமைத்துவிடும் ஆனால் தீய செயல் ஒன்றுசெய்தால் அதைத் திரும்பத் திரும்பச் செய்யவே ஆசை உண்டாகிறது, என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். ஆதலால் ஒழுக்கம் பழுதானால் அதைச் சரிப்படுத்த அதிக கவனமும் முயற்சியும் தேவையாகும். அந்த விசேஷ முயற்சியைத்தான் "கழிவிரக்கம் கொள்ளுதல்" என்று கூறுவார்கள்.

160

காப்பி குடிக்கிறீர்கள். வயறு கெட்டுப்போகிறது. அதுமட்டுமன்று. காப்பியை மறுபடியும் குடிக்க வேண்டுமென்ற ஆவல் உண்டாகிறது. அப்படியே காப்பி குடிக்கும் வழக்கம் ஏற்பட்டுவிடுகிறது. அந்த நோயைக் குணப்படுத்த முடிவதில்லை. ஆகவே கர்மம் என்னும் நியதியை அறிந்து கொள்ளவேண்டுமானால், ஒவ்வொரு செயலுக்கும் இந்தவிதமாக ஏற்படும் இரண்டு பயன்களையும் அறிந்து கொள்ளவேண்டும். காப்பிக்குடி வழக்கத்தை ஒழிக்கவேண்டுமானால் அதற்குப் பதிலாக வேறொன்று குடிக்கும் வழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். அதுபோல் தீய செயல் செய்வதை நிறுத்தவேண்டுமானால் நல்ல செயல் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஆகவே கர்மம் என்னும் நியதிப்படி நடக்க விரும்பினால், நாம் எப்பொழுதும் நம்முடைய ஒழுக்கத்தை அருஞ்செல்வமாகக் கருதி நடக்கவேண்டும்

கண்ணுடிச்சாமான்களை ஒரு கோணிப்பையில் போட்டுச் சுமந்து கொண்டு போனால், யாரும் அறியமாட்டார்கள். இடித்து விடுவார்கள்; உடைந்து போகும். அதனால் வெகு சாக்கிரதையாக நடந்துசெல்வோம். அதுபோல் நடந்துகொள்ள வேண்டும்.

161

மழை பெய்தால் அநேக விதமான செடிகள் முளைக்கின்றன. அதுபோல் ஜன சமூகத்தில் புதிய உயிர் தோன்றும் பொழுது அநேக விதமான காரியங்கள் நடைபெற ஆரம்பிக்கின்றன.

162

தாம் செய்யும் காரியம் தான் முக்கியமானது என்று ஒவ்வொருவரும் கர்வம் கொள்வது சகஜம். அப்படி நாம் கர்வம் கொள்வோமானால், பிறர் கர்வத்துக்கு ஏன் பங்கம் விளைவிக்க வேண்டும்? ரயில் வண்டி ஓடும்பொழுது அதிலுள்ள ஒவ்வொரு பகுதியும் அதிர்ச்சியடைகின்றது. அதைக்கண்டு சக்கரமானது மற்றப் பகுதிகளைப் பார்த்து "இதோ பாருங்கள் நீங்கள் ஏன் அதிர்கிறீர்கள்! நான் தான் வண்டியை இழுத்துச் செல்கிறேனே" என்று கேட்கலாமா?

163

சிலர் மதத்தையே அழித்துவிட விரும்புகிறார்கள். மதம் முற்றிலும் பயனற்றதாகவும், பொய்யானதாகவும் ஆகிவிடுமானால் பாம்பு சட்டை கழற்றுவதுபோல் அதை அழித்துவிட

வேண்டியது அவசியம் தான் ஆனால் பாம்பு சட்டையை நீக்கி விடுகிறதேயன்றி, அது இறந்துபோவதில்லை. அதுபோல் மதத்தில் சேர்ந்த அழுக்குகளை நீக்கிவிடவேண்டுமேயன்றி, மதத்தை அழித்துவிட வேண்டிய தில்லை. பாம்புக்கு உயிர் தோலன்று, ஆனால் பாம்பு உயிர் வாழ்வதற்குத் தோல் அவசிய மாகும். இந்தியா தேசத்தில் மதத்தை அழித்துவிட்டால் இந்தியா இறந்து போகும் என்பது என் கருத்து. மதத்தை அழித்து இந்தியாவைப் புனருத்தாரணம் செய்ய முடியாது. ஜனங்கள் மதங்களின் பெயரால் சண்டையிட்டுக் கொண்டிருக் கிறார்கள். அதை நாம் நிறுத்த வேண்டும். அதற்காக நாம் மதத்தையே அழித்து விட வேண்டிய அவசியமில்லை. சிலர் சமூக சீர் திருத்த விஷயத்தில் நமக்கு மாறான கருத்துடையவர் களாயிருந்தால், அதற்காக சமூக சீர் திருத்த வேலையையே விட்டுவிட வேண்டுமென்று கருதுகிறீர்களா?

164

சரியான வழியில் சென்றால் ஜெயம் காண்பது நிச்சயம். ஜெயம் காணவிட்டால் வேலையை எல்லாம் நிறுத்திவிட வேண்டியதே என்று எண்ணிவிட வேண்டாம். இளைஞர்கள் அதைரியப்படலாகாது.

தண்ணீரில் விழுந்தவன் தத்தளிப்பது போல, நாம் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். கரை சேரவேண்டியதே நம்முடைய பிரதானமான நோக்கம். அதை மறந்துவிட்டு நமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கலாகாது. நமக்குப் பலமில்லாவிட்டாலும், வெற்றி கிடைக்காவிட்டாலும் கடவு ளிடம் பிரார்த்தனை செய்ய வேண்டுமேயன்றி, பிறரிடம் குற்றம்

கண்டு பிடிப்பதிலேயே திருப்தி அடையலாகாது. குற்றம் கண்டுபிடிப்பது சேவையாகாது.

165

தவறான நோக்கங்களைச் சாதித்துக் கொள்வதற்காக ஏற்பட்டதல்ல சத்தியாக்கிரக முறைகள் என்பவை. பாஷாணத்தை மருந்தாக உபயோகிக்கலாமே யன்றி, மக்களைக் கொல்வதற்கு உபயோகிக்கக்கூடாது.

166

துஷ்டத்தனமுள்ள குதிரை, வண்டியை வேகமாக இழுத்துச் செல்லுவது போலவே, வண்டியை உதைத்துத் தள்ளவும் செய்யும். அந்தமாதிரிச் செய்யாது எருமை. நீங்கள் குதிரையை ஓட்டிப் பழக்கப்பட்டிருந்தால் நல்ல வார்த்தைகளால் தான் நல்ல குதிரையாகச் செய்ய முடியும் என்பதை அறிந்திருப்பீர்கள். சில சமயங்களில் பயமுறுத்தி வேகமாக ஓடும்படி செய்து விடலாம். ஆனால் அது சிறிது நாட்களுக்குத் தான். குதிரையோ, மாடோ வைத்துப் பழக்கமானவர்களிடம் கேட்டுப்பாருங்கள். அன்பு ஒன்றினால்தான் அவைகளை வசக்கலாம் என்று கூறுவார்கள். பலாத்காரத்தைஉபயோகித்தால் பலன் ஏற்படாது. அதேபோல்தான் மனைவி மக்கள் விஷயமும். நம்மனத்தில் நல்ல எண்ணங்கள் இருந்தால் பிறர் மனத்திலும் நல்ல எண்ணங்கள் உற்பத்தியாகும். அது எப்படி என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாமலிருக்கலாம். ஆயினும் அன்பும், ,வெறுப்பும் மின்சார சக்தியைப் போலவே வேலை செய்கின்றன.

167

தாவரங்களுக்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு, தாய்க்கும் குழந்தைக்குமுள்ள தொடர்பு போன்றதாகும். நாம் கெட்ட தென்று எதை எறிந்து விடுகிறேமோ, அதைத் தாவரங்கள் தாயைப்போல நல்ல பொருள்களாகச் செய்து நமக்குத் திரும்ப அளித்துவிடுகின்றன. ஆதலால் உலகத்தின் வாழ்வில் தாவரங்கள் எத்தகைய முக்கியமான ஸ்தானத்தை வகிக் கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம்.

168

தென்னை மரத்தைப் பாருங்கள். தேங்காய்கள் அதன் உச்சியில் காய்க்கின்றன. அவ்வளவு உயரத்திலிருந்து விழுந் தாலும் அவை சேதமடைவதில்லை. ஏன் தெரியுமா? அதன் மீது பருத்த மூடி யிருப்பதுதான் காரணம். தேங்காயைக் கவனித்தால் அதன் கொப்புழ் எது என்று தெரிந்து கொள்ள லாம். மரத்தில் தொங்குவதற்குப் பயன் படும் காம்புதான் அதன் கொப்புழ்க் கொடி. குழந்தை பிறந்தபின் தாயினின்றும் பிரிந்து தனி உயிராக வாழ்வது போலவே, தேங்காயும் மரத்தி னின்றும் விழுந்தபின் தனித்து வாழ முடியும். தேங்காயையும் ஒரு முட்டையாகப் பாவிக்கலாம். அதனுள் அது செடியாக வளர்வதற்கு வேண்டிய உயிர்ச்சத்தும், உணவும் உள. தென்னங்கன்று தேங்காயினுள் வளர்ந்து வரும் வரைக்கும் அதிலுள்ள பருப்பும் நீருமே உணவாகப் பயன் படுகின்றன. பருப்பும், நீரும் நமக்காகவே ஏற்பட்டவை என்று எண்ண லாகாது. கன்று உண்டாகவும், நிலத்தில் வேரூன்றவும் கூடிய பருவமடையும் வரைக்கும் உணவாகப் பயன் படவே

அவை தேங்காயினுள் வைக்கப்பட்டிருக்கின்றன. இது தான் தென்னை மரத்திலுண்டாகும் முட்டையின் சரிதை யாகும். இது போலவேதான் நெல்லும். அதிலும் உமியினுள்ளேயே அரிசிக் குழந்தை யிருக்கிறது. அந்தக் குழந்தைக்கு நிலத்தில் வாழத் தெரியும் வரைக்கும் அதனுள்ளேயே உணவு சேகரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அரிசி எல்லாம் நமக்காக சிருஷ்டிக்கப் பட்டிருப்பதாக நாம் எண்ணிக்கொள்கிறோம். அது தவறு. அதனுள் வைக்கப்பட்டிருக்கும் உயிர்க்கு உணவாகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன.

169

நாம் வசிக்கும் இந்த உலகமும், அதில் வாழும் நம்முடைய சிற்றுயிர்களும் எத்துணை அற்பமானவை? எலியைப் பிடிக்கப் பொறி வைக்கிறோம். அதனுள் பல எலிகள் சேர்ந்து அகப்பட்டுக் கொள்கின்றன. அங்குள்ள வெங்காயத்தைத் தின்னவும், விளையாடவும், சண்டையிடவும் செய்கின்றன அவற்றுள் சில மகிழ்கின்றன; சில வருந்துகின்றன. இது போல்தான் நாமும், நம்முடைய பூமியும்.

170

வால்மீகி ராமாயண காலத்துக்கும், முஸல்மான்கள்வந்த காலத்துக்கும் இடையில் நாலாயிரம் ஆண்டுகள் கழிந்தன. இந்த நீண்ட காலத்தில் உயர்ந்த நாகரீகமே காணப்பட்டது. அப்படி உயர்ந்த நாகரீகம் இருந்திருக்குமானால் அது ஒழுங்கான ஆட்சி நடைபெற்றால்தான் சாத்தியமாகும். ஆதலால் இடை

யிடையே சண்டை சச்சரவுகள் நடைபெற்றிருந்த போதிலும், சமாதானமே அதிகமாக நிலவியிருக்க வேண்டும். அப்படியானால், தானே கல்வியும், கலையும், தத்துவமும், தர்மமும் செழித்து வளர முடியும்? இப்படி முஸல்மான்களுக்குமுன் நடைபெற்ற ஹிந்து சுயராஜ்ய ஆட்சிக்காலம், பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தைப்போல், நாற்பது மடங்கு கொண்டதாகும். பாட்டி கம்பை ஊன்றிக்கொண்டு தள்ளாடி நடப்பதற்கும், இடையில் நிற்காமல் ஓடும் எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிக்கும் எத்துணை வேறுபாடு? நாற்பது மடங்கு என்பதன்பொருளை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

நாம் மரங்களிடையே நின்றுகொண்டு, கோபுரத்தைப் பார்த்தால் மரங்களே கோபுரத்தைவிட உயரமானவைபோலத் தோன்றும்; மரங்கள் கோபுரத்தை மறைத்துவிடவும் செய்யும் அதுபோல் நாம் பிரிட்டிஷ் ஆட்சியிலேயே வசித்ததால்தான் அது அதிக நாள் நடைபெற்றதாகத் தோன்றுகிறது. ஆனால் அது தவறு. நம்முடைய நாகரீக மணியில் பிரிட்டிஷ் ஆட்சி ஒரு மணியே. கோகலே காலத்து மக்கள் ஆங்கில ஆட்சியே சாஸ்வதம் என்று எண்ணினார்கள். அதுபோலவேதான் ஔரங்கஜேப் காலத்து மக்கள் முகலாய ஆட்சியேதான் சாஸ்வதம் என்று எண்ணியிருப்பார்கள்.

171

கண்ணுக்குக் காணப்படவில்லை என்பது கடவுள் இல்லை என்பதற்கு ஒரு காரணமாகுமா? இரவில் நட்சத்திரங்கள் திரள் திரளாகக் காணப்படுகின்றன. பகலில் எல்லாம் மறைந்து போகின்றன. கண்களைக்கொண்டு காணாத பொருள்கள் இல்லவே இல்லை என்று சாதிக்க முடியுமா?

நம்முடைய அறிவீன வாழ்க்கையில் கடவுளைக் காணவில்லை என்கிற காரணத்தினால் கடவுளே இல்லை, கடவுளுக்கு அவசியமும் இல்லை என்று சாதிக்கவேண்டாம்.

172

குடிப்பதற்குத் தண்ணீர் மொள்ளும்போது குளத்தினின்று லேசாக மேலேயுள்ள தெளிந்த தண்ணீரை எடுத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய சேற்றைக் கலக்கித் தண்ணீரைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. உள்ளம் தூய நிலையடைந்து தரும வாழ்க்கை வாழ விரும்பினால் பக்தியை உறுதியாகக்கொண்டு தியானமும் உபாசனையும் மெள்ள நடத்திக்கொண்டு போக வேண்டும். சாஸ்திரப் பிரவசனத்திலும் மீமாம்சங்களிலும் சமயதத்துவ வாதங்களிலும் காலங்கழித்து மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டாம். நம்முடைய சிற்றறிவு சிறு குட்டைத் தண்ணீரைப் போன்றது. ரொம்பக் கலக்கிவிட்டால் சேறுதான் மேலேவரும்.

173

தயிருக்குள் வெண்ணெய் உண்டு என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் தயிரைக் கடைந்தால்தான் வெண்ணெய் வருமே யொழிய, "தயிரில் வெண்ணெய் இருக்கிறது" "தயிரில் வெண்ணெய் இருக்கிறது" என்று எவ்வளவு கத்தினாலும் வெண்ணெய் வராது. பரம்பொருளைக் காணவேண்டுமானால் பக்தியுடன் உள்ளத்தில் விருப்பத்தைக் கடையவேண்டும். 'பரமாத்மா' என்றும் 'ஜீவாத்மா' என்றும் தத்துவம் பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. தாயைக் காணாத குழந்தை தாயைக்காண விரும்பி வருந்துவதைப்போல் ஆண்டவனை அடைய உள்ளத்தில் வருந்தி உருக வேண்டும்.